SOUTHALL SHUTTERS (NATIONWIDE)
Shop Front - Roller Shutter - Glass
*Shop Shutters * Remote Control Garage Shutters
*Van Shutters *Door Closers *Industrial Shutters
SALES - SERVICE - REPAIR
LEICHESTER - LONDON - BIRMINGHAM
Tel. Head Office: 020 8843 2235

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

TV
+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk UN-39 Jul. 2004 For News & Advertising: 020 8952 5677 16 பக்கங்கள்

# தெற்காசிய குற்றவாளிகள் குறிவைக்கப்படுகின்றனர்

# மெற் பொலிஸ் புதிய நடவடிக்கை



மெற் துணை ஆணையாளர் ராறிக் கபூர்

தெற்காசியக் குற்றவாளிகளைக் குறிவைத்து புதிய நடவடிக்கை ஒன்றுக்கு மெற் பொலிசார் தயாராகின்றனர். தெற்காசிய சமூகங்களிடையே அதிகரித்து வரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த மெற் துணை ஆணையாளர் ராறிக் கபூர் (படம்) தலைமையிலான பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட உள்ளது. ராறிக் கபூர் மெற் பொலிஸின் உயர் அதிகாரியாவார். கறுப்பின சமூகங்களுக்கிடையே உள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட ஒப்பிரேசன் ரைடன் போன்று இப்பிரிவும் செயற்பட இருக்கிறது. கொலை, ஆட்கடத்தல்கள், போதைவஸ்துக் கடத்தல் ஆகிய குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த இப்பிரிவு நடவடிக்கை எடுக்கும்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஸ், நேபாள், பூட்டான், மாலத்தீவு ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்த சமூகங்களை தெற்காசியா உள்ளடக்குகிறது. இதில் முதல் 5 நாடுகளினதும் சமூகங்கள் வெளிப்படையான சமூகங்களாகத் தெரியும் படி உள்ளன. 1993ல் தெற்காசியச் சமூகங்களில் 10 கொலைகளே இடம்பெற்றிருந்தது. 10 ஆண்டுகளில் 2003ல் இது 38 ஆக அதிகரித்தது. 1998ல் 90 ஆட்கடத்தல்கள் தெற்காசிய சமூகத்துக்குள் இடம்பெற்றது. அடுத்த 5 ஆண்டுகளில் அது 228ஆக அதிகரித்தது. இவற்றைவிடவும் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களின் பாவனை, வன்செயல்கள், போதைப் பொருள் பாவனை என்பனவும் இச்சமூகத்தினுள் அதிகரித்து உள்ளது. மேலும் முஸ்லீம் சமூகத்தவர்களிடையே உள்ள பலாத்கார திருமணங்கள் அது தொடர்பான கௌரவக் கொலைகள் என்பன தெற்காசியர்களிடையே கொலைகள், ஆட்கடத்தல்கள் என்பவற்றுக்கு ஒரு காரணமாக உள்ளது.

மற்றைய சமூகங்களைப் போல ஆசிய சமூகத்தவர்களும் குற்றங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளை வரவேற்பார்கள் என்று தெரிவித்துள்ள மெற் துணை ஆணையாளர் ராறிக் கபூர் பொலிசாரும் ஆசிய சமூகத்தவர்களும் பங்காளிகளாக இணைந்து செயற்பட வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

UDHAYAN
for your cost
effective ADVT.

CINNAMON
Sri Lankan, Indian & Pakistani Cuisine
* Catered for all occassions
Daily 12 - 11:30 pm
* 10% Discount over £13.50 (Take-away only)
* Free delivery within 5 miles
* Sunday Buffet £5.99 (Eat-in)
* 100 String Hoopers £16.50 only
020 8861 6363
34, High Street, Wealdstone, Harrow, Middx.

UDHAYA Stores & PHOTOLAB
* FREE FILM ON CD AGFA
* Cheaper than anywhere in Hayes
* 20% Discount for 3 or more films
* Special Rate Outdoor Filming
Most Sri lankan foods in Hayes at Special Price
Call 020 8573 5395
1100 Uxbridge Road, Hayes, Middx.

Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occassions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

Locall Telecom
Home & Business pre-paid Accounts
It's the same rate even from your mobile phone
USA 2p
Canada 2p
Sri Lanka 12p
France 2.5p
Kenya 14p
Call us for more fantastic offers
020 8933 2199
www.Locall-ltd.com

Creative Curtains (LONDON) Ltd.
Made to Measure Service for Curtains & Blinds
Contact Dee Dee
Tel: 020 8574 2156
Mobile: 07780 572 429
15 Witley Ind. Est. Witley Gardens,
Southall UB2 4EZ

C & S Builders Merchants (Stamford Hill) Ltd.
NEW SUPER STORES over 1 acre site
SKIPS FOR HIRE
MANY OPENING
SPECIAL OFFERS IN WALTHAMSTOW
OPEN 7 DAYS A WEEKS Call: 020 8498 2000
C & S HOUSE: 151, Blackhorse lane, London E17 5QU, Tel: 020 8498 2000
276-286 Stamford Hill, London N16 6TY, Tel: 020 8809 5373
122-126 Grove Green Road, London E11 4EL, Tel: 020 8539 2391
E-mail: sales@csbuildersmerchants.co.uk www.csbuildersmerchants.co.uk
Also at LEYTON & STAMFORDHILL

Man & Co Estate Agents
SALES - LETTINGS - MANAGEMENT - FINANCIAL SERVICES
3 Fryent Way, Kingsbury, London NW9 9ER
Tel: 020 8206 9930 Fax: 020 8206 9931
Web: www.manandco.co.uk
Email: info@manandco.co.uk
NAEA
your property is at risk if you do not keep up with the repayment or other loans secured on it. writen details on request. *All loans subject to status
Future Finance
020 8206 9939
In-House experienced financial advisors
Specialists in residential mortgages
True Self-Cert and Non-Status mortgages
Exclusive mortgage rates
Specialists in adverse credit advice (CCJs, Arrears, Defaults)
Commercial Loans*

SPL Offer 5 GARMENTS Drycleaned £9.99 only
Bring this Advertisement in and get your
WASHING DONE FOR HALF PRICE
MONDAY - FRIDAY ONLY
OPEN 8am - 10pm TUE & THUR
Rest of the days 8am - 8 pm
Mob: 07984644259
at junction of East Lane/Watford Rd. 14 Court Parade
also at Northolt
12 Manderville parade (A312) next to KFC Part of Saisha Ltd.
Laundry, Dry Cleaning & Ironing Centre

The UDHAYAN
உதயன்
ADVERTISE
FOR BEST RESULTS
020 8952 5677

# சவுத்தோல் இளைஞரைக் கடத்திய ஆறு பேர் கைது

19 வயதான தமிழ் இளைஞரைத் துப்பாக்கி முனையில் கடத்திய ஆறு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் நால்வர் மீது ஆட்கடத்தல், உடற்காயம் ஏற்படுத்தியமை, துப்பாக்கி வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டது. இந்நால்வரும் யூலை 2ல் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். மற்றைய இருவரும் யூலை இறுதியில் மேலதிக விசாரணைகளுக்கு வருமாறு உத்தரவிடப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

யூன் 29 இரவு 8 மணியளவில் ஈலிங் பறோ பொலிஸார் SO19 என்ற துப்பாக்கிப் பிரிவின் துணையுடன் கரோவில் உள்ள முகவரி ஒன்றை முற்றுகையிட்டு நால்வரைக் கைது செய்தனர். ஏழு மணி நேரத்தின் பின் காலை 3 மணியளவில் ஹெய்சில் உள்ள இன்னுமொரு முகவரியை முற்றுகையிட்ட பொலிசார் அங்கிருந்து மேலும் இருவரைக் கைது செய்தனர்.

கரோவில் உள்ள முகவரியில் இருந்து மாணவர் பிரதீப் கந்தசாமி (வயது 26 - The Heights, Northolt), பாரம் தூக்கும் இயந்திர சாரதி ஜீவகாந்தன் லக்ஸ்மிகாந்தன் (வயது 21 - Evegreen Way, Hayes), சமையல் பகுதி ஊழியர் சின்னையா ராதாகிருஸ்ணன் (வயது 30 - Mercer Rd, Hayes), வர்த்தகர் வரதன் கந்தையா (வயது 31 - Minet Drive, Hayes) ஆகிய நால்வரே கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது ஆட்கடத்தல், உடலில் காயம் ஏற்படுத்தியது போன்ற குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளது. பிரதீப் கந்தையா மீது தடைசெய்யப்பட்ட ஆயுதத்தை வைத்திருந்தமை, ஆயுதத்தை வைத்து வன்முறையில் ஈடுபட்டமை ஆகிய மேலும் இரு குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்னணி :

யூன் 28 இரவு 11 மணியளவில் சவுத்தோல் வீதி ஒன்றில் வைத்து துப்பாக்கி முனையில் ஐவர் ஒரு இளைஞரைக் கடத்தி உள்ளனர். கடத்திச் செல்லப்பட்ட இளைஞர் கரோவில் உள்ள ஒரு முகவரியில் முதல் மாடியில் அடைத்து வைக்கப்பட்டு மோசமாகத் தாக்கப்பட்டு உள்ளார். மறுநாள் அதிகாலையில் தான் அடைத்து வைக்கப்பட்ட முதல் மாடியின் யன்னலினூடாக தப்பியோடிய கடத்தப்பட்ட இளைஞர் நண்பர்களின் உதவியுடன் சவுத்தோல் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சம்பவத்தை முறையிட்டு உள்ளார். அங்கிருந்து அவ்விளைஞர் மருத்துவ வண்டியில் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டார். பல உடற்காயங்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அவரது உடல் நிலை நல்ல நிலையில் இருப்பதாக தெரியவருகிறது.

பொங்கல் தினத்தன்று மகேஸ்வரன் கணேசனின் கொலைக்குப் பின் யூன் இறுதி வரையான ஆறுமாத காலப் பகுதியில் தமிழ் இளைஞர் குழுக்களுக்கிடையே கொலைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறாமல் தடுப்பதில் மெற்றோ பொலிட்டன் பொலிசார் வெற்றி கண்டுள்ளனர். ஆனால் இளைஞர் குழுக்களுக்கிடையே வெளித் தெரியாத பகைமையும் பழிவாங்கல் தாக்குதல்களும் இடம்பெறுவதாக தமிழ் பொலிஸ் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி ஸ்டீபன் ஹவுஸ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

TEMPTATION
Restaurant & Bar
North Indian & Muglai Cuisine
with a drift of Oriental
Buffet 12 noon -3.30pm
£4.99 only
Party orders welcome
Open 7 days 12pm to 12am midnight
Call us on 020 8206 2206
487 Kingsbury Rd., Kingsbury NW9 9ED

# சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம்

உலகம் முழுவதும் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். சிறுவர்களை பாலியலில் ஈடுபடுத்துவதில் தாய்லாந்து முதலாம் இடத்தையும் பிலிப்பைன்ஸ் இரண்டாம் இடத்தையும் வகிக்கின்றது. பிரித்தானியா, ஜேர்மனி போன்ற நாடுகளில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் போது அவை ஊடகங்களின் முழுக் கவனத்தையும் ஈர்க்கின்றன. ஆனால் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் சிறுவர்களின் பாலியல் துஸ்பிரயோகம் என்பது அவர்களது நாளாந்த வாழ்க்கையாகிறது. மேலும் மேற்கு நாடுகளில் இருந்து பாலியல் நோக்கங்களுடன் இலங்கை போன்ற நாடுகளுக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்வதும் நடைபெறுகிறது.

சிறுவர்களை துஸ்பிரயோகம் செய்யும் நாடுகளின் பட்டியலில் உலகிலே இலங்கை மூன்றாம் இடத்தில் உள்ளது. சிறுவர்களை பாலியல் தேவைகளுக்கு பயன்படுத்துபவர்களை கவரும் நாடாக இலங்கை இருந்து வருகிறது. 20 சதவீதமான சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஐநா வின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இத்தகவல்களை வெளியிட்டு உள்ளது. இலங்கையில் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையான சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் மதிப்பிட்டு இருக்கிறது.

தென்னிலங்கையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாகச் செல்லும் பெண்கள் தங்கள் பிள்ளைகளை கணவன்மாரிடமே விட்டுச் செல்கின்றனர். இந்நிலையில் இப்பெண்களின் பிள்ளைகள் குறிப்பாகப் பெண் பிள்ளைகள் உறவினர்களாலே குறிப்பாக சொந்தத் தந்தையினாலேயே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர். கிழக்கு இலங்கையில் யுத்தத்தினால் தாய்தந்தையை இழந்த குழந்தைகள், அல்லது தந்தையை இழந்த குழந்தைகள் வீட்டு வேலை, கூலிவேலையில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அச்சமயங்களில் இவர்கள் பாலியல் மற்றும் துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

# இன்ரனெற்றில் குழந்தைகள் மீதான துஸ்பிரயோகம் இன்ரபோல் மாநாடு

இன்ரநெற்றினூடாக சிறுவர்களை பாலியல் துஸ்பிரயோக நடவடிக்கைகளுக்கு அழைக்கும் 700 சர்வதேச குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு உள்ளதாக இன்ரர்போல் உதவிப் பணிப்பாளர் மீஸ் மெக்குலோச் தெரிவித்துள்ளார். கொழும்பில் யூன் 14ல் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான இன்ரர்போலின் 22 ஆவது மாநாட்டில் மீஸ் மெக்குலோச் இத்தகவலை வெளியிட்டார். 35 நாடுகளைச் சேர்ந்த 110க்கும் மேற்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டை இன்ரபோலின் இலங்கைப் பிரிவு ஏற்பாடு செய்திருந்தது.

வளர்ந்த நாடுகளில் இந்தப் பிரச்சினை கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. ஆனால், வளர்முக நாடுகளில் இன்ரர்நெற் மூலம் சிறுவர்களை பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு பயன்படுத்தப்படுத்துவது பெரும் பிரச்சினையாகி வருகிறது. இக்குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் தப்பிக் கொள்ளும் திறமையும் கொண்டிருக்கின்றனர். புலனாய்வு நடவடிக்கைகளும் பொதுமக்களின் ஒத்துழைப்பும் இதனைக் கட்டுப்படுத்த மிக அவசியம் என்று அம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் 2000இல் 500 சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகி உள்ளனர். கரையோரப் பிரதேசங்களில் வாழும் சிறுவர்களே இவ்வாறான பாதிப்புகளுக்கு அதிகம் முகம் கொடுத்துள்ளனர். சுற்றுலா பயணிகளே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இலங்கையில் உள்ளவர்களின் உதவியுடனேயே வெளிநாட்டவர்கள் இக்குற்றங்களை இழைக்கின்றனர். வறுமை, அறியாமை, பாதுகாப்பின்மை, தனிமை போன்ற காரணங்களே சிறுவர் துஸ்பிரயோகங்களுக்கு வழி வகுத்துள்ளது.

SAVE £££ POUNDS ON TUTION FEES
Verbal & Non-Verbal Questions on Interactive CD
OVER 2000 QUESTIONS for Grammar & Independent School
Entries on interactive CD
Cost £25 includes p&p.
Send cheques or postal orders to:
SCHOOLMATHSCLUB LTD.
BCM 4300
LONDON WC13XX
Website: www.schoolmathsclub.com

T.C.S. TUTORIAL COLLEGE
Celebrating 10 years of Education Excellence
Offers first class education in small classes
- GCSE's - full and part-time subjects
- Computing courses
- EFL and ESOL English classes - all levels
- Saturday School for Children
- Full-time GCSE studies for 14-16yrs old.
Call Now:
Tel: 020 8206 2988
Email: tcs_school@tiscali.co.uk
TCS Tutorial College, Alpine House, Honeypot Lane, Kingsbury, London NW9 9RX

## உதயன் பற்றி...

கடந்த 8 வருடங்களாக வெளிவரும்; அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்ட; தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை உதயன். தமிழ் சமுதாயத்திற்கு பயன் உள்ள வகையில் சமூக நோக்குடன் தேசிய அளவில் வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஒரே தேசிய பிரித்தானிய செய்தி தமிழ் பத்திரிக்கை பற்றி உங்களுக்கு...

பல்லாயிரம் வாசகர்களின் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்ற உதயனை இலவசமாக வாசிக்க அளிப்பவர்கள்:

டாக்டர். இரவிக்குமார் (சற்குரு சுவாமிகள்)
நிறுவனர்-ஆசிரியர்

அன்னை காயத்ரி
நிறுவனர்-துணை ஆசிரியர்

திரு.த.புஷ்பலிங்கம்
விளம்பர பொறுப்பாளர்

திரு.த.ஜெயபாலன்
தலைமை நிருபர்

ர கொன்ஸன்ரைன்
செய்தி ஆய்வு நிருபர்

துணை நிருபர்கள் :
கே அரவிந்தன் (இலண்டன்)
ஜெ வெற்றிச்செல்வன் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கெ பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

மற்றும் :
புலனாய்வு நிருபர்கள், விநியோகஸ்தர்கள்

**உதயன் : அதிக பிரதிகளை பிரசுரிக்கும் பரந்த விநியோகத்தைக் கொண்ட தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிக்கை.**

தொடர்புகளுக்கு: Global News Media **GNM (PVT) LTD.**, 25-27 High St., Edgware, Middx. HA8 7EE **Tel: 020 8952 5677**

**உதயன் நடுநிலைமையை கொண்ட மக்களின் நண்பன். உதயன் எப்பொழுதும் உண்மைகளை மட்டுமே ஒருசார்பற்றமுறையில் பேதமின்றி உண்மைகளை வெளியிடும் ஒரே பத்திரிக்கை.**

# குடியேற்றத்தால் நாடுகள் நன்மை அடைகின்றன

புலம்பெயர்ந்தவர்களின் சட்டபூர்வமான வங்கி நடவடிக்கைகள் மூலம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் 100 பில்லியன் டொலர் வருவாயைப் பெற்றுக் கொண்டுள்ளன. இந்தியா 10 பில்லியன் டொலரையும் இலங்கை 1.14 பில்லியன் டொலரையும் பெற்றுக் கொண்டுள்ளன. உலகம் முழுவதும் 175 மில்லியன் மக்கள் குடிபெயர்ந்தும் அகதிகளாகவும் வாழ்கின்றனர் என சென்ற ஆண்டுத் தரவுகள் தெரிவிக்கின்றன. குடியேற்றம் தொடர்பான சர்வதேச அமைப்பின், ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளுக்கான விசேட கூட்டம் பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவில் நடைபெற்றது. இலங்கை உட்பட 31 நாடுகளைச் சார்ந்த 150 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். ஆசிய அபிவிருத்தி வங்கி, யூ.என்.எச்.சி.ஆர். போன்ற அமைப்புகளது பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் குடியேற்றத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது, குடியேற்றத்தால் ஏற்படும் நன்மைகளை எவ்வாறு அதிகரிப்பது என்பது பற்றியும் ஆராயப்பட்டது. இவ்வமைப்பு கடந்த ஆண்டு சுவிற்ஸர்லாந்து ஜெனிவாவில் புதிதாக இயங்க ஆரம்பித்தது. பொருளாதார அபிவிருத்தி, ஊழியர் வழங்குதல் பற்றிய நிபந்தனைகள், மனித உரிமை பேணல், பணம் அனுப்புதல் - பெறுதல் செயற்பாடுகள், சுகாதார வசதிகள், வறுமை ஒழிப்பு, சர்வதேச மற்றும் தனிமனித பாதுகாப்பு போன்ற விடயங்களில் இவ்வமைப்பு கவனம் செலுத்தி வருகின்றது. குடியேற்றத்தினது சாதக, பாதக அம்சங்களைத் தற்போது இவ்வமைப்பு ஆராய்ந்து வருகிறது.

NEWS AGENT SHOP FOR SALE
* Long Lease (Renewable)
* Turnover £4000 per/week
* Plus Bus Pass £1200 per week
* Can change into Off-Licence
Interested ? CALL
SIVA on
07958 790235

New London College
Learn English, IT, Basic & Business Computing, Accounting, Book-Keeping, Business, Management
at
New London College, Hounslow
(opp. Hounslow West Tube Station)
Day, Evening & Weekend Classes.
Teaching by experienced faculty with high standards of syllabus.
Career Development Programs & Workshops
Motivation, Communication & Presentation Skills, Negotiating Skills, Leadership Skills, Time, Stress & Crisis Management
for further information Call: 020 8570 7766
or visit www.newlondoncollege.co.uk
1 Martindale Road, Hounslow West TW4 7EW
(opposite Hounslow West Tube Station)

"The UDHAYAN" Published by [Global News Media] GNM (PVT) LTD. in London at, I Floor 25-27 High Street Edgware, Middx. HA8 7EE U.K. Tel: 020 8 905 7775 Fax: 020 8952 5677 e-mail: thelondon@udhayan.freeserve.co.uk

# ஐ நா சமாதானப் படைப் பயிற்சி

ஐ நா அமைதிப் படையினருடன் ஒன்றிணைந்து சர்வதேச நாடுகளில் இலங்கைப் படைகளும் அமைதிப் பணிகளில் ஈடுபட உள்ளன. இது இலங்கையில் நிரந்தர அமைதியைக் கொண்டு வருவதற்கு உதவும் எனத் தெரிவிக்கப்படுகிறது. சமாதானப் பணிகளில் ஈடுபடவுள்ள படையினருக்குப் பயிற்சிகள் பெற்றுக் கொடுப்பதற்காக குக்குலே கங்கை பகுதியில் யூன் 12ல் இரானுவப் பயிற்சிப் பாடசாலையின் அங்குரார்ப்பண வைபவம் இடம்பெற்றது.

இவ்வைபவங்களில் இலங்கை வந்துள்ள அமெரிக்கப் படையின் ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜேம்ஸ் எல் கெம்பல் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார். ஐ நா அமைதிப் படைப்பிரிவின் ஒத்துழைப்புடனும் அமெரிக்காவின் அனுசரணையுடனும் இலங்கையில் இடம்பெறும் இப்பயிற்சியில் மொங்கோலியா, நேபாளம் பங்களாதேஸ், அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளைச் சேர்ந்த தலா 45 இராணுவத்தினருடன் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 70 படையினரும் கலந்து கொள்கின்றனர்.

சாம கமன என்று பெயரிடப்பட்ட, இலங்கையில் முதற் தடவையாக இராணுவத்தில சமாதான படைப்பிரிவொன்றை ஸ்தாபிக்கும் இந்த நடவடிக்கை சர்வதேச நாடுகளின் அமைதித் தேவைகளுக்கும் உள்நாட்டு அமைதிப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படவுள்ளது. சகாரா, கொங்கோ, புருன்டி, போன்ற நாடுகளில் இலங்கைப் படைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலர் அமைதி காக்கும் சிறப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். கெய்ட்டிக்கும் இலங்கைப் படையினர் அமைதி காக்கும் பணிகளுக்கு செல்லத் தயார் செய்யப்படுகின்றனர்.

# சட்ட உதவியில் காசு கறக்கும் சட்டத்தரணிகள்

அரசியல் தஞ்ச வழக்குகளை நடாத்தும் 25 வீதமான சட்டத்தரணிகள் தஞ்சம் கோருவோருக்கு வழங்கப்படும் சட்ட உதவியிலிருந்து காசைக் கறப்பதாக அரசாங்கம் தெரிவித்து உள்ளது. தொடர்ச்சியாக மேலதிகமாக சட்ட உதவிகளைப் பெற்ற 100 சட்ட நிறுவனங்களை அரசு அடையாளம் கண்டுள்ளது. நம்பிக்கையற்ற வழக்குகளை கொண்டுவந்து 30 மில்லியன் பவுண்களை சட்ட உதவியில் இருந்து பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான 25 வீதமான சட்ட நிறுவனங்களை அரசாங்கம் அம்பலப்படுத்தி உள்ளது. இந்நிறுனங்களின் ஓடிற் பார்க்கப்பட்டு இவை தரம் குன்றியவையாக முத்திரையிடப்பட்டு உள்ளது.

தஞ்சம் கோருவோருக்கு சட்ட உதவிகளை வழங்கும் பல சட்டத்தரணிகள் விண்ணப்பதாரருக்கு வழங்க வேண்டிய தரமான சேவைகளை வழங்குவதில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. 1996 - 97 நிதியாண்டில் 26 மில்லியன் பவுணாக இருந்த சட்ட உதவிச் செலவீனம் கடந்த நிதியாண்டில் 204 மில்லியனாக உயர்ந்து உள்ளது. ஆனால் இவ்வதிகரிப்பு தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கையுடன் ஒத்துச் செல்லவில்லை. தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்தும் சட்ட உதவிச் செலவீனம் அதிகரித்துச் செல்கிறது.

தஞ்ச விண்ணப்பங்கள் குறைந்த போதும் மீண்டும் மீண்டும் மேன்முறையீடு செய்யப்படுவதால் இந்த சட்ட உதவிகள் செலவீனம் அதிகரித்து உள்ளதாகக் கூறப்படுகிறது. அரசாங்கம் இதனைத் தடுக்க மேன்முறையீடு செய்வதில் உள்ள கட்டுப்பாடுகளை மேலும் இறுக்கலாம் என்றும் தஞ்சம் கோருவோர் அஞ்சுகின்றனர் என தெரிய வருகின்றது.

# ஜேர்மன் தமிழர் இலங்கை பொலிசாருக்கு எதிராக மனித உரிமை வழக்கு

ஜேர்மன் பிரஜையான வேலுப்பிள்ளை கந்தசாமி என்பவர் அடிப்படை உரிமை மீறல் வழக்கை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். தன்னை கைது செய்து ஒரு வாரமாகத் தடுத்து வைத்தது சட்டவிரோதமானது என்று வே கந்தசாமி தனது மனுவில் தெரிவித்து உள்ளார். ஜேர்மனியில் வாழ்ந்துவரும் சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தசாமி தனது தந்தையாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக மே 23ல் கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்தார். அங்கு கொலை தொடர்பான சந்தேகத்தின் பெயரில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கந்தசாமி தடுத்து வைக்கப்பட்டு கட்டுநாயக்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். ஒரு வாரத்தின் பின் தவறுதலாக அடையாளம் காணப்பட்டதாகக் கூறி மே 31ல் பொலிசார் அவரை விடுதலை செய்தனர்.

கட்டுநாயக்கா பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட கந்தசாமி, நீர்கொழும்பு பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். கொலை வழக்கு ஒன்று தொடர்பாக யாழ். மேல் நீதிமன்றத்தில் அவர் ஆஜர் செய்யப்பட வேண்டி இருப்பதாக பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர். தன்னை மறுநாளேனும் யாழ். மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் படியும், அப்படிச் செய்தால், தான் அங்கு பிணை அனுமதி பெற்று, தந்தையின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றமுடியும் என்றும் கந்தசாமி நீதிவானிடம் கோரினார். பொலீஸாரின் கோரிக்கைப்படி கந்தசாமியை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், கந்தசாமியின் கோரிக்கையை ஏற்று அவரை யாழ். நீதிமன்றத்தில் உடன் ஆஜர்செய்ய உத்தரவிட்டார். எனினும் பொலீஸார் கந்தசாமியை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்தனர். யாழ் கொண்டு செல்லவில்லை. பின்னர் பிழையாக அடையாளம் கண்டதால் கைது செய்துவிட்டதாகத் தெரிவித்து மே 31ல் விடுவித்தனர். தான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதால் தனது தந்தையின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்ற முடியவில்லை என்றும் கந்தசாமி தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இது ஒரு அடிப்படை உரிமை மீறல் என்றும் தனக்கு 5 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் கந்தசாமி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். கந்தசாமியின் மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வழக்கு ஒக்ரோபர் 4ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட இருக்கின்றது.

# றோயல் மெயில் பெரும் இலாபம் ஈட்டி உள்ளது - தபால்கள் தாமதமாகின்றது

றோயல் மெயில் இந்நிதியாண்டில் 400 மில்லியன் பவுண் இலாபத்தை ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வளவு இலாபத்தில் இயங்கும் போதும் கடந்த ஆறு மாதத்தில் 54 வீதமான இல்லங்கள் கால தாமதமாகத் தபால்களைப் பெற்றுள்ளன. கடந்த ஆண்டு மட்டும் 14.4 மில்லியன் தபால்கள் தொலைந்து உள்ளன அல்லது விநியோகிக்கப்படவில்லை என தபால் கண்காணிப்பு அமைப்பு தெரிவிக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக நிதிநெருக்கடியை எதிர்கொண்ட இந்நிறுவனம் நாளொன்றுக்கு இரு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட தபால் விநியோகத்தை ஒரு தடவையாக மாற்றியது. மேலும் 30,000 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இந்நிதியாண்டில் 250 மில்லியன் பவுண் இலாபம் ஈட்டப்படும் என்று மதிப்பிடப்பட்டு இருந்தது. தற்போது 400 மில்லியன் பவுண் இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த நிதியாண்டுக்கும் இதே வேகத்தில் வளர்ச்சி இருந்தால் றொயல் மெயிலில் பணியாற்றும் 200,000 பேருக்கும் £1,000 படி போனஸ் வழங்கப்படும் என அதன் தலைவர் அலன் லெய்டன் தெரிவித்து உள்ளார். இவர் அஸ்டா சுப்பர் மாக்கற்றின் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் தஞ்சம் பெற்றவர்கள் நாடு திரும்ப விரும்புகின்றனர்

இவ்வாண்டின் முதல் 5 மாதங்களில் தமிழகத்திலிருந்து 950க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 5000 அகதிகள் நாடு திரும்பியுள்ளதாக மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. உள்நாட்டு யுத்தம் காரணமாக சுமார் 2 இலட்சம் ஈழத் தமிழ் அகதிகள் தமிழகம் சென்றிருந்தனர். தற்போது தமிழகத்தில் அகதி முகாம்களில் 1,20,000 அகதிகளும், வெளியே 60 000 பேரும் தங்கி இருக்கின்றனர். கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக தமிழகத்தில் தங்கியிருந்த நிலையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சுமுக சூழ்நிலையை அடுத்து பெருமளவு அகதிகள் நாடு திரும்புகின்றனர்.

இவ்வாறு நாடு திரும்பும் அகதிகளை அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மன்னார் செயலகம் தெரிவிக்கின்றது. அவ்வாறு செய்யப்பட்டால், தாயகம் திரும்பக் காத்திருக்கும் பெருமளவு அகதிகள் விரைவில் இங்கு வந்து சேருவர் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# டிமிக்கி விட முடியாது

வேகமாக வாகனங்களை ஓட்டுபவர்கள் அபராதத்துக்காக கடிதம் வந்ததும் வாகனத்தை நான் ஓடவில்லை என்றும் எனது மனைவி, மச்சான், நண்பர்கள் ஓடியதாகவும் டிமிக்கி விட்டுத் தப்பி வந்தனர். இதன் மூலம் அபராதத்தில் இருந்து தப்பியதுடன் தங்கள் புள்ளிகளை இழக்காமல் தப்பினர். இதுவரை வேகக் கமராக்கள் வாகனத்தின் இலக்கத்தகட்டை மட்டுமே பின்பக்கத்தில் படம் பிடித்து வந்தது. அதனால் ஓட்டுநர் யார் என்பது தெரியாது. ஆனால் புதிதாகப் பொருத்தப்படும் வேகக் கமராக்கள் இலக்கத்தகட்டுடன் ஓட்டுநரையும் படம் பிடிக்கின்றன.

Truvelos எனும் இப்புதிய கமராக்கள் குறைந்த செலவில் நிறைந்த பலனைக் கொடுக்கின்றன. இவை பழைய Gatsos கமராக்களிலும் அரைவாசியான பிலிமை பயன்படுத்தி தெளிவான படத்தைப் பதிவு செய்கின்றன. தற்போது 600 Truvelos கமராக்களும் 4,500 Gatsos கமராக்களும் பயன்பாட்டில் உள்ளது. இன்னும் 10 ஆண்டுகளில் Gatsos கமராக்கள் இல்லாமல் போய்விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# TBC வானொலியைத் தடுக்க புலிகள் கோரிக்கை

இலங்கையில் ஒரு மணிநேரம் ஒலிபரப்பப்படும் இலண்டனில் இயங்கும் ரிபிசி வானொலியை தடுக்கும் படி விடுதலைப் புலிகள் நோர்வே அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். தனது 5வது வருடத்தை நிறைவு செய்து ஆறாவது வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் ரிபிசி வானொலி இவ்வாண்டு ஆரம்பம் முதல் இலங்கையிலும் ஒரு மணிநேரம் ஒலிபரப்பப்படுகிறது. ஊரோடு உறவாடுவோம் என்ற இந்நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினூடாக இலங்கை நேரம் மாலை 7 மணிக்கும் பிரித்தானிய நேரம் 2 மணிக்கும் கொட்பேட் செய்மதியூடாக ஒலிபரப்பப்படுகிறது.

இது இவ்வாறிருக்க ரிபிசி வானொலி அறிவிப்பாளர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக ஸ்கொட்லன்ட்யாட்டில் முறையிடப்பட்டு உள்ளது. மேற்படி வானொலியின் பணிப்பாளர் ராம்ராஜ்க்கு பூவா? பொட்டா? என்று கேட்டு எச்சரிக்கப்பட்டதாகவும் அவருடைய மனைவியை வெள்ளைச் சேலை வாங்கி வைக்கும்படி மிரட்டியதாகவும் அவ்வானொலி பொலிசாருக்கும் மனித உரிமை அமைப்புகளுக்கும் ஊடகவியல் அமைப்புகளுக்கும் முறையிட்டு உள்ளது. ஸ்கொட்லண்ட் யாட் பொலிசார் இவ்வானொலி மீதான மிரட்டல்களை விசாரித்து வருவதாக தமிழ் பொலிஸ் துறைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# கிறடிற்காட் - புதிய நடைமுறைகள்

பணத்துக்குப் பதிலாக பிளாஸ்ரிக் காட்களை பயன்படுத்துபவர்கள் புதிய நடைமுறைகளை அணுக வேண்டும். இதுவரையும் சிட்டையில் தங்கள் கையெழுத்துக்களை இட்ட நிலைமாறி பின்கோட் இலக்கங்கள் பயன்பாட்டுக்கு வர உள்ளது. மேலும் புதிய பாதுகாப்புக் கூடிய பிளாஸ்ரிக் காட்கள் அடுத்த ஆண்டில் நடைமுறைக்கு வர உள்ளன.

கடந்த 4 ஆண்டுகளில் கிறடிற் காட்டில் பெறப்படும் கடன்களின் எண்ணிக்கை 62 வீதத்தால் அதிகரித்து உள்ளது. கடந்த ஆண்டு முடிவில் கட்டப்படாத மொத்த கிறடிட்காட் கடன்தொகை 53.5 பில்லியன் பவுணாகும். அதன் படி ஒவ்வொருவரும் சராசரியாக £1,140 கடனைப் பெற்றிருந்தனர். எம்மில் பலரின் கிறடிட்காட் கடனுடன் ஒப்பிடுகையில் £1,140 ஒரு பிரச்சினையாகவே இராது.

# கருணைநிதி

125 புற்று நோயாளர்க்கான கருணை நிதி யூன் இறுதிப் பகுதியில் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து வழங்கப்பட்டது. லண்டன் சிவயோகம் அறக்கட்டளை சார்பில் ஆறு திருமுருகனின் அனுசரணையுடன் ரூற்றிங் முத்துமாரி அம்மன் கோயிலில் வைக்கப்பட்டுள்ள உண்டியலில் சேரும் பணத்தில் இருந்து இந்தக் கருணை நிதி வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா (£11.50) வீதம் வழங்கப்பட்டது.

# தலைதுண்டிக்கப்படும் சுவிஸில் எச்சரிக்கை

தலைதுண்டிக்கப்படும் என்ற எச்சரிக்கையுடன் சுவிஸில் மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் என்ற அமைப்பு துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு உள்ளது. மொட்டையாக வெளியிடப்பட்டு உள்ள இப்பிரசுரத்தில் அமைச்சர், அரசியல் தலைவர்கள், வானொலி அறிவிப்பாளர்கள், மனித நேயவாதிகள், இலக்கியவாதிகள் என மாற்றுக் கருத்துக்களுடன் உள்ள பலர் மீதும் எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. இது பற்றித் தகவல் தந்த இம்மொட்டைப் பிரசுரத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் சுவிஸ் பொலிசாருக்கு இது தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டு உள்ளதாகத் தெரிவித்தார்.

LIFESTYLE MORTGAGES
The Mortgage Code Compliance Board
Registered with the Mortgage Board

INDEPENDENT MORTGAGE SPECIALISTS
enquiries@lifestylemortgages.uk.com
MORTGAGE PROBLEMS ??? NO PROBLEM !!!
Call Lifestyle today for a quick answer to your problems
Also available:- 125% Mortgages, First-time Buyers, Council RTB, Income multiples 4 x Single or 3.25 x Joint Self-Employed - No Proof of Income required & No Accounts (90% maximum advance). Adverse credit, Defaults, CCJs, Bankruptcy, etc. (All loans subject to your own financial circumstances)
NO MORTGAGE = NO FEE
8am to 10pm Monday to Saturday (We only chager on results)
Call now: 020 8574 2008
For friendly assistance and a written quotation
A Fee of 1% of any loan arranged is usually charged by Lifestyle Mortgages
6A South Road, Southall, Middx. UB1 1RT
Yor home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secured on it.

EDITOR: Dr T RAVIKUMAR Chief Reporter: T.JEYABALAN Advertising Manager: T. PUSHPALINGHAM FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

# பெண்களின் உள்ளாடைகளில் பகவான் கிருஷ்ணனின் படம் - இந்துக்களும் பௌத்தர்களும் கடும் சீற்றம்

கடவுள்களின் உருவப்படங்களால் ஆண் பெண்களின் உள்ளாடைகள் விற்பனைக்கு வந்துள்ளது. கிருஸ்ணனினது உருவப்படங்கள் கொண்ட பெண்களின் உள்ளாடைகளும் பாதணிகளும் புத்தரினது நீச்சல் உடைகளும் மேற்கில் சந்தைப்படுத்தப்படுகின்றன. இலண்டனில் ஹரோட்ஸ் டிபாற்மென்ரல் ஸ்ரோர்ஸ் கிருஸ்ணன் படத்தைக் கொண்ட உள்ளாடைகளையும் பாதணிகளையும் காட்சிக்கு வைத்து விற்பனையை மேற்கொண்டது. புத்தரின் உருவத்தைக் கொண்ட நீச்சல் உடை இலங்கையில் விளம்பரப்படுத்தப்பட்டது. தாங்கள் புனிதமாக வணங்கும் கடவுள்களை பெண்கள் பாலியல் கவர்ச்சிக்காக அணிவது தங்கள் மதத்தை அவமதிப்பதாக இந்துக்களும் பௌத்தர்களும் கருதுகின்றனர்.

இலண்டனில் இந்த அமைப்புகள் வழங்கிய அழுத்தத்தால் ஹரோட்ஸ் நிறுவனம் கிருஸ்ணனது உருவம் கொண்ட உள்ளாடைகள் பாதணிகளை காட்சி, மற்றும் விற்பனைப் பகுதியில் இருந்து அப்புறப்படுத்தியது. மேலும் மேற்படி சம்பவம் தங்கள் வாடிக்கையாளருக்கு அவமதிப்பை ஏற்படுத்தி இருந்தால் அதற்கு தாங்கள் மன்னிப்புக் கோருவதாக அந்நிறுவனம் தெரிவித்து இருந்தது. ஹரோட்ஸ் நிறுவனம் மொகமட் அல்பெயிட் என்ற எகிப்திய ஸ்லாமியருக்குச் சொந்தமானது. சிறுபான்மை மதத்தவரான அல்பெயிட் இது விடயமாக அசட்டையாக இருந்தது மதங்களுக்கிடையேயான புரிந்துணர்வை பாதிக்கும் என இந்து ஆலயப் பொறுப்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையில் நீச்சலுடையில் புத்தரின் உருவம் உள்ள விளம்பரத்தைப் பார்த்த புத்த பிக்கு ஒருவர் முறையிட்டதை அடுத்து இலங்கையின் உச்ச நீதிமன்றம் அந்நீச்சலுடையின் இறக்குமதியை முற்றாகத் தடை செய்தது. சிங்கள மக்களின் கலாச்சாரப் பாதுகாவலர்களாக தங்களைக் கருதும் பிக்குகள் மேற்குலகின் பொருளியல் வாழ்வியல் தங்கள் மீது தாக்குதல் தொடுப்பதாகக் கருதுகின்றனர்.

இத்தாலிய அழகியலாளர் றோபேற்றோ கவ்வால்லியால் வடிவமைக்கப்பட்ட கிருஸ்ணன் உள்ளாடைகள் உலகின் எப்பாகத்திலும் விற்பனை செய்யப்படுவதை தாம் அனுமதிக்க மாட்டோம் என பிரித்தானியாவில் இயங்கும் இந்து மனித உரிமை அமைப்பு அறிவித்து உள்ளது. தான் இந்து கலாச்சாரத்தை கொண்டாடும் நோக்கத்துடனேயே இவற்றை வடிவமைத்ததாக றோபேற்றோ கவ்வால்லி தெரிவித்து உள்ளார். மேலும் புத்தரின் உருவம் கொண்ட நீச்சலுடைகள் உலகின் எப்பாகத்திலும் சந்தைப்படுத்துவதைத் தடுக்க இலங்கை இராஜதந்திரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்து உள்ளார்.

இந்துக் கடவுள்கள் மேற்குலகில் ஆடை அலங்காரங்களில் பயன்படுத்தப்படுவது இது முதற் தடவையல்ல. பிள்ளையார், சிவபெருமான் ஆகியோரது படங்கள் கொண்ட கேக் 2002ல் செல்பிறிஜ் ஸ்ரோரில் விற்பனை செய்யப்பட்டது. அமெரிக்காவில் 2000 நவம்பரில் ரொய்லட் சீற்றில் பிள்ளையாரதும் காளியினதும் உருவப்படங்கள் பொறிக்கப்பட்டது. ஜேர்மனியில் முக்குத் துடைக்கும் ரிசுவில் கிருஸ்ணனின் படம் பொறிக்கப்பட்டது. மேலும் பெண்கள் அணியும் முழு நீள ஸ்கேட்டில் பிள்ளையார் படம் இருந்தது.

புதிய அழகியல் அம்சங்களைத் தேடும் மேற்குலகின் அழகியலாளர்கள் இந்துக் கலாச்சாரத்தின் வளம் மிக்க அம்சங்களை அவற்றின் கலாச்சார மதிப்புத் தெரியாமல் பயன்படுத்துகின்றனர். இதனால் இனங்களுக்கிடையே மனக்கசப்பு ஏற்படுகிறது.

# சர்வதேச மன்னிப்புச் சபையிடம் லண்டனில் முறைப்பாடு

இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் அரசியல் படுகொலைகள் நிறுத்தப்படவில்லை என அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமைகளுக்கான இயக்கம் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு தெரிவித்து உள்ளது. இப்படுகொலைகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் உட்பட இலங்கை பூராவும் நடந்துள்ளது என அவ்வியக்கத்தின் செயலாளர் எஸ் பாலச்சந்திரன் தெரிவித்து உள்ளார். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளில் ஏற்பட்ட உடைவுக்குப் பின்னர் இவ்வாறான கொலைகள் அதிகரித்து உள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

இவை குறித்து பல தடவைகள் வலியுறுத்தியும் நோர்வே மத்தியஸ்தக் குழுவினர் பயனளிக்கும் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை எனக் குற்றம்சாட்டியுள்ள அவ்வியக்கம் இலங்கையில் நிகழும் அரசியல் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இதற்கு சர்வதேச மன்னிப்புச்சபை வழிகோல வேண்டும் எனக் கோரி உள்ளது. மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு கிட்டத்தட்ட 2 வருடங்கள் கழிந்த பின்னரும் இலங்கை, இந்திய அரசுகள் மட்டுமின்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் அனைவரையும் உடன் விடுதலை செய்ய சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்த வேண்டும் எனவும் அவ்வியக்கம் சர்வதேச மன்னிப்புச் சபையை கேட்டுக் கொண்டுள்ளது.

# தவறான ஆலாசனை வழங்கியவர் வேலைநீக்கம்

# நியாயமற்ற வேலைநீக்கம் ! அலுவலர் செல்லத்துரை

அண்மைக்காலமாக நீதிமன்றங்களுக்கு இழுபட்டு வந்த தமிழ் வீடமைப்பு யூலை 14ல் மீண்டும் ஒரு தடவை நீதிமன்றம் ஏறியது. வீடமைப்பு அலுவலர் செல்லத்துரை, வாடகைக்கு இருந்த கலைமோகன், சாந்தமலர் தம்பதிகளுக்கு தவறான ஆலோசனை வழங்கியாதாகக் குற்றம்சாட்டப்பட்டு கடந்த ஆண்டு செப்ரம்பரில் வேலைநீக்கம் செய்யப்பட்டார். நட்டஈட்டுத் தொகை பற்றிய மதிப்பீட்டில் விசாரணை ஆரம்பித்தது. போக்குவரத்துச் செலவு, சுகவீன விடுமுறை என்பனவற்றுக்கு செல்லத்துரையை பிரதிநிதித்துவப்படுத்திய டொக்டர் நகுலேஸ்வரன் (நாக் அன் கோ) விளக்கமளிக்கத் தவறியதால் அவை கைவிடப்பட்டது. இவ்வேலை நீக்க உத்தரவை தமிழ் வீடமைப்பின் தலைவர் ராம்ராஜ் வழங்கி இருந்தார். செல்லத்துரை வேலைநீக்கம் செய்யப்பட வேண்டும் என்ற ஆலோசனையை தமிழ் வீடமைப்பின் இயக்குநராக அப்போது இருந்த ஆர் ஜெயதேவன் வழங்கியதாகவும் அவர் செல்லத்துரைக்கு அழுத்தங்களையும் தொந்தரவையும் வழங்கியாதாக டொக்டர் நகுலேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

தமிழ் வீடமைப்பின் பொறுப்பில் இருந்த ஈஸ்ற்காம் ஹையம் றோட்டில் கலைமோகன் - சாந்தமலர் தம்பதிகள் வசித்து வந்தனர். வீட்டின் உரிமையாளர் அவ்வீட்டை மீளப் பெற்றுக்கொள்ள கேட்டிருந்தார். அதனால் கலைமோகன் - சாந்தமலர் தம்பதிகள் அவ்வீட்டில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர்களுக்கு வேறு இடம் வழங்கப்படும் என்றும் தமிழ் வீடமைப்பு தெரிவித்து இருந்தது. இது தொடர்பாக கலைமோகன் - சாந்தமலர் தம்பதிகள் தமக்குள்ள அசௌகரியங்களை செல்லத்துரைக்கு முறையிட்டு ஆலோசனை கேட்டுள்ளனர். அதற்கு நீதி மன்ற உத்தரவு வரும்வரை அவர்கள் அங்கேயே இருக்கலாம் என்று செல்லத்துரை ஆலோசனை வழங்கி இருந்தார். இதனை மற்றுமொரு அலுவலர் கஜேந்திரன், கலைமோகன் - சாந்தமலர் தம்பதிகளைத் தொடர்பு கொண்டு ஏன் வெளியேறவில்லை எனக் கேட்ட போது செல்லத்துரை கூறிய ஆலோசனையை அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

செல்லத்துரை வழங்கிய ஆலோசனை தமிழ் வீடமைப்பின் நலன்களுக்கு முற்றிலும் எதிரானது என்றும் இந்த ஆலோசனையினால் கலைமோகன் - சாந்தமலர் தம்பதிகள் அவ்வீட்டில் இருந்து வெளியேறவில்லை. அதனால் வீட்டு உரிமையாளருக்கு £3109 தமிழ் வீடமைப்பு செலுத்தியது. இத்தொகை தமிழ் வீடமைப்புக்கு ஏற்பட்ட நட்டம். என்பது தமிழ் வீடமைப்பின் வாதம்.

இவ்வழக்கு ஆர் ஜெயதேவன் இயக்குநராக இருக்கும் போது தொடரப்பட்டது. செல்லத்துரையின் தரப்பில் வாதம் ஆர் ஜெயதேவனையே மையப்படுத்தியே கட்டப்பட்டது. ஆனால் ஜெயதேவன் - ராம்ராஜ் இடையே ஏற்பட்ட நெருக்கடியில் ராம்ராஜ் ஜெயதேவனை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்துவிட்டார். அதனால் நீதிமன்றத்தில் ராம்ராஜ் ஜெயதேவனுக்கு ஆதரவாகச் செயற்பட்டு செல்லத்துரையை வேலைநீக்கம் செய்தார் என்ற வாதம் பலமாக வில்லை. டொக்டர் நகுலேஸ்வரனின் வாதம் ஜெயதேவனை மையப்படுத்தியே இருந்தது. மேலும் நியாயமற்ற வேலைநீக்கம் என்பதைத் தவிர்ந்த வாதங்களை டொக்டர் நகுலேஸ்வரன் வைத்த போது நீதிபதி அவற்றை நிராகரித்துவிட்டார்.

வழக்கில் ராம்ராஜ் முதல் சாட்சியாக அழைக்கப்பட்டார். குறுக்கு விசாரணை செய்த டொக்டர் நகுலேஸ்வரன் தொலைபேசியில் கலைமோகனா, சாந்தமலரா உரையாடியது என்ற குழப்பத்தையும், ராம்ராஜ் கலைமோகன் - சாந்தமலர் தம்பதிகளை சந்தித்தன் குறிப்பை செல்லத்துரைக்குத் தெரியப்படுத்தாததையும் சுத்திச் சுத்தி சுட்டிக்காட்டினார். வழக்கு ஆமை வேகத்தில் நகர்ந்தது.

செல்லத்துரை சாட்சியமளிக்கையில் அவருக்கு ஆங்கில மொழி தடங்கலாக அமைந்தது. அதனால் வழக்கைத் தொடர்வது செல்லத்துரைக்கு ஏற்புடையதல்ல என்பதால் வழக்கு மற்றுமொரு திகதிக்கு புதிதாக ஆரம்பிக்க உத்தரவிட்டார் நீதிபதி. அடுத்த திகதிக்கு முன்னர் நீதிமன்றத்துக்கு வெளியே இது தீர்க்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

www.imperial-world.com
The Furniture Warehouse
For all your furniture needs
Sofas, Dining Sets, Beds + mattresses, Desks, coffee tables, Wardrobes + Chests
Stores - Wimbledon, Hayes & Perivale
020 8998 7344

thelondon@udhayan.freeserve.co.uk

SIGN STOP
020 8514 6622
Quality Shop Signs
Right on Time !!
Window + Van Graphics
தரமான சைன்ஸ் குறிப்பிட்ட நேரத்திற்கு பெற்றிட நாடுங்கள்
568, Romford Road, Manor Park, E12

Dogra Estate Agents
Specialists in Residential Sales, Letting for Professional Tenants
Call Mr.Arvind Dogra on
Tel: 020 8574 3737
Fax: 020 8574 3737
Mobile: 07899 797979
Emai: property2000dea@aol.com
120 The Green, Southall, Middlesex, UB2 4BQ

We DISCOUNT our PRICES not our QUALITY
DISCOUNT (CONSTRUCTION) DOUBLE GLAZING
FENSA Registered Company
Over 20 Years Experience
Selling direct to Public
VISIT OUR SHOWROOM and see our VAST RANGE of
QUALITY CONSERVATORIES
Visit our website: www.dconsdgltd.co.uk
Email: bhudia@freeuk.com
Call 020 8514 0819
844 Romford Rd, Manor Park, London E12 5JP

Motor Masters
Top Quality Servicing & Repair on all Makes of Vehicles
M.O.T. While you wait
Unit 7, The Squirrel Trading Estate,
Viveash Close,
Nestles Avenue,
Hayes,
Middlesex UB3 4RZ.
Tel: 020 8561 9100
Fax: 020 8573 8641

MAHARAJA
Indian Meat & Poultry
WHOLESALERS & RETAILERS OF FRESH MEAT & POULTRY
SUPPLIERS TO THE TRADE & RESTAURANT
WE ALSO SELL
BOILER CHICKEN GROUSE, QUAILS, (BHATERA), DEER, PIGEON, RABBIT, SPRING LAMB, AND WHOLE MUTTON AT LOW PRICES
Tel: 020 8813 7700
776 Uxbridge Road, Hayes, middx. UB4 0RS

V.J.CARPETS Ltd.
Full 3 Bedroom house Carpets
100 Sq. Yds. SPECIAL OFFER
only £500 Fitted
CALL
(T) 020 8574 9033
(M) 07958 681 009
110, The Green, Southall, Middx. UB2 4BQ

BRIGHT WINDOWS LTD www.brightwindows.co.uk
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches

Trade & Retail Welcome
020 8459 8811
www.brightdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP

SAMRANA
* BLANK MEDIA CD-R, DVD-R, BLANK VHS,
* CD JEWEL CASES / DVD CASES,
* PRINTING PAPERS, INK CARTRIDGES,
* PLASTIC SLEEVES AND WALLETS
T: 020 8520 9485/ 020 8521 4646
F: 02089237658
INFO@SAMRANA.CO.UK
website: www.samrana.co.uk
74 HOE STREET W'STOW, LONDON E17 4PG

# பிரித்தானியாவில் முத்தரப்புச் சந்திப்பு இலங்கையில் சர்வதேசத் தலையீடு

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங், லண்டனில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோவுடன் இலங்கை நிலவரம் தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளார். இச்சந்திப்பு யூன் நடுப்பகுதியில் இடம்பெற்று உள்ளது. இதற்கு முன் யூன் 11ல் லண்டன் வந்த இலங்கையின் ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சருக்கு இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து எடுத்துக் கூறியதாக இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள், இந்தியா போன்ற வெளிநாடுகள் இலங்கை இனநெருக்கடி விடயத்தில் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டு உள்ளன.

தற்போது இலங்கைக்கான உயர்ஸ்தானிகராக முதற்தடவையாக ஓய்வு பெற்ற புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் கேணல் பாஸிர் வாலியை பாகிஸ்தான் நியமித்து உள்ளது. நாணய மோசடி, போதைப்பொருள், ஆட்கடத்தல் போன்றவற்றுக்கு இலங்கையை இடைத்தங்கல் நிலையமாக பாகிஸ்தான் பயன்படுத்துகிறது. இந்தியாவில் தனது நடவடிக்கைகளை பாகிஸ்தான் மேற்கொள்ள இலங்கையை பயன்படுத்த முடியுமென்று, இந்தியப் பாதுகாப்பு நிபுணர் ஒருவர் கூறியுள்ளார். இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தற்சமயம் பாகிஸ்தான் தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லையாயினும், கணிசமான முஸ்லிம் சனத்தொகையைக் கொண்ட இலங்கையின் அரசியலில் அது தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் சாத்தியம் இருப்பதாக, இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பிரித்தானியா, இலங்கை தமிழ் சினிமா பற்றிய விழிப்புணர்வு

தலைநகர் இலண்டனில் சினிமா விழிப்புணர்வுக் கூட்டங்களை ஏற்பாடு செய்த சலனச் சித்திரம் அமைப்பின் ஸ்தாபகர் க தேவதாஸ் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவு இயக்குநராக நியமிக்கப்பட்டு உள்ளார். கால்நூற்றாண்டுக்கும் மேலாக சினிமாத்துறையில் தன்னை இணைத்துக் கொண்ட தேவதாஸின் இந்த நியமனம் ஈழத்தமிழ் திரை ஆர்வலர்களிடம் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது.

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் இதுவரை காலமும் தமிழ் பிரிவு ஒன்றைக் கொண்டிருக்கவில்லை. மாறி, மாறி பதவிக்கு வந்த அரசுகளிடமும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் பல தடவை அதற்கான கோரிக்கை முன் வைக்கப்பட்ட போதும் அவை ஒரு பக்கத்தால் கேட்டு மறுபக்கத்தால் வெளியேற்றப்பட்டது. ஆனால் ஜேவிபி உறுதி அளித்தபடி பதவிக்கு வந்ததும் திரைப்படக் கூட்டுத் தாபனத்தில் தமிழ் பிரிவை ஏற்படுத்திக் கொடுத்து உள்ளனர்.

ஆட்சியில் ஏற்பட்டு உள்ள நெருக்கடி காரணமாக முழுமையான செயற்பாடுகள் நடைமுறைக்கு வர சற்று காலதாமதமாகலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் ஆட்சி மாறினாலும் உருவாக்கப்பட்ட தமிழ் பிரிவை நீக்க முடியாது. ஜேவிபி யின் இம்முயற்சி இலங்கைத் தமிழ் சினிமாவில் ஒரு மைல்கல் என்றே கருதப்படுகிறது.

## மோர்னிங் ஸ்ரார் - உதய தாரகை போட்டி முடிவுகள்

இலண்டனில் உள்ள இலங்கை மோர்னிங் ஸ்ரார் விளையாட்டு கழகங்களின் கிரிக்கட் போட்டி முடிவுகள் வெளிவந்து உள்ளது. யூன் 20ம் திகதி முடிவுகளின் படி றெட்பிறிஜ் லங்கெயன் கிரிக்கட் கழகமும் வில்சன் கிரிக்கட் கழகமும் முன்னனியில் நிற்கின்றன. முழுமையான முடிவுகள் கீழுள்ள அட்டவணையில் தரப்படுகிறது. 46 விளையாட்டுக் கழகங்களின் கூட்டமைப்பான மோர்னிங் ஸ்ரார் அமைப்பு 11வது ஆண்டாக தொடர்ச்சியாக சுற்றுப் போட்டிகளை நடத்தி வருகிறது. இந்த 46 விளையாட்டுக் கழகங்களும் 5 பிரிவுகளாக தரம் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறுகின்றன.

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT D 011 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ

ADVERTISE FOR BEST RESULTS 020 8952 5677
The UDHAYAN உதயன்

SIGN ★ A ★ RAMA
"WHERE THE WORLD GOES FOR SIGNS"
For all your Signage needs
Shop Fascias, Window Graphics, Pavement Boards and much more
0800 634 0096
220 Church Lane, Kingsbury
London NW9 8SN
www.signking.net
QMS ISO 9001 REGISTERED FIRM Reg. No. 8876

Panesar Electrical Co
Lighting Showroom
NOW OPEN @ 362 HIGH STREET NORTH MANOR PARK LONDON E12 6PH
FOR MORE INFO
TEL: 020 8472 1873 FAX: 020 8471 6271

# ஊடகவியலாளர் பாதுகாப்பு

ஊடகவியலாளர் நடேசனது அஞ்சலிக் கூட்டத்தில் ஊடகவியலாளர்களின் குறிப்பாக இலங்கையில் உள்ள ஊடகவியலாளர்களின் பாதுகாப்புப் பற்றி மிகுந்த வேதனை தெரிவிக்கப்பட்டது. வீரகேசரி மற்றும் ஐபிசி வானொலிகளில் ஊடகவியலாளராகப் பணிபுரிந்த ஜி நடேசன் மே இறுதிப் பகுதியில் கொல்லப்பட்டிருந்தார். இவருக்கு அஞ்சலி செலுத்த ஐபிசி வானொலி யூன் 18ல் ஒரு சந்திப்பை ஒழுங்கு செய்திருந்தது. இலண்டனில் இயங்கும் சில ஊடகங்களின் உறுப்பினர்களும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மாற்று மருத்துவ நிபுணர் சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஊடகவியலாளர் மாகாலிங்கசிவம், கரவைக்கவி, தமிழர்தகவல் நடுவம் விசாகன், ஐபிசி அறிவிப்பாளர் எஸ் கே ராஜன், பணிப்பாளர் சிவரஞ்சித் ஆகியோர் உரையாற்றினர். அக்கூட்டத்தில் சமூகமளித்தவர்களும் தமது இரங்கலைத் தெரிவித்தனர். இறுதியில் ஊடகவியலாளர் பாதுகாப்பு நிதியம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டது. இந்நிதி நடேசனது குடும்பத்தினருக்கும் பாதிக்கப்படும் ஊடகவியலாளர்களுக்கும் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதே நோக்கத்தக்காக ஜேர்மனியிலும் வேறு பிரிவினர் நிதி சேகரித்து உள்ளனர். யூன் 27ல் 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட பாராட்டு விழாவில் இந்நிதி சேகரிப்பு இடம்பெற்றது.

# அமரர் வேலனின் நினைவு

வித்துவான் வேலனின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலி யூன் 26ல் இல்போர்ட்டில் நடைபெற்றது. சைவப் புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை தலைமையில் இடம்பெற்ற இவ்விழா கலாநிதி கோபன் மகாதேவாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது. வேலனின் பழைய மாணவர்கள் ரவீந்திரமோகன், நாகன் சூரி ஆகியோர் அவரைப் பாராட்டியதுடன் வேலனின் நினைவுகளை மீட்டிச் சென்றனர். வள்ளுவத்தில் விஞ்சிக்காண்பது அறிவியலா? உளவியலா? என்ற பட்டிமன்றம் சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது. வழக்கறிஞர் சிறிகாந்தலிங்கம், மாதவி சிவலீலன் எம் பி எல், தமிழ் ஆசிரியை அன்னலட்சுமி ஜெயபாபு, உமா ஜெயக்குமார் பி எ ஆகியோர் பட்டிமன்றத்தில் வாதிட்டனர். விழாவின் இறுதியில் வேலனின் மதிப்பிற்குரிய மாணவர் அ சிவபாதசுந்தரம் நன்றியுரை வழங்கினார்.

# செயற்பாட்டுக்குழுவில் முக்கல் முனகல் தலைநகரில் இளையராஜாவின் சிம்பொனி ஒத்திவைப்பு


யூலை 31ல் இடம்பெற இருந்த இளையராஜாவின் சிம்பொனி இசையில் அமையவுள்ள திருவாசகம் இசை வெளியீட்டு அறிமுக நிகழ்ச்சி காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டு உள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது. முதலில் இந்நிகழ்ச்சி மே மாதம் லண்டனில் பிரம்மாண்டமான முறையில் இடம்பெற திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தது. பின்னர் இந்நிகழ்ச்சி யூலை மாதம் 31ம் திகதிக்கு மாற்றப்பட்டது. தற்போது இத்திகதி சாத்தியம் அற்றதால் இந்நிகழ்ச்சி காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டு உள்ளது. சிம்பொனியில் திருவாசகம் நிகழ்ச்சி இவ்வருடத்தில் இடம்பெறுவது முற்றிலும் சாத்தியமற்றது எனத் தெரியவருகிறது.

இவ்விசை வெளியீட்டு விழாவுக்கு இளையராஜாவிற்கும் லண்டனில் அமைக்கப்பட்ட வேலைத்திட்ட குழுவிற்கும் இணைப்பாளராக வண பிதா கஸ்பர் இருந்து வருகிறார். லண்டனில் வேலைக்குழுவின் தலைவராக ஜவன் பேதுருப்பிள்ளை செயற்படுகிறார். இக்குழுவில் சண்றைஸ் சன்குகன், டொக்டர் சிறி, மற்றும் சண்றைஸ் டொக்டர் நித்தியானந்தனும் உள்ளனர்.

சர்ச்சைக்குரிய இலண்டனில் உள்ள ஆலயமும், தமிழ்ப் பாடசாலையும் தொகையான பணத்தை இளையராஜாவின் இம்முயற்சிக்கு வழங்கி இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இது இப்படியிருக்க இளையராஜாவின் இத்திட்டம் தொடர்பாக அமெரிக்காவில் நியமிக்கப்பட்ட வேலைத்திட்டக் குழு இரண்டாகப் பிரிந்து இழுபடுவதும் இந்நிகழ்ச்சியின் தாமதத்திற்கு ஒரு முக்கிய காரணம் என அறியப்படுகின்றது.

# அமைதி குலைந்த நாட்கள்





**தலைமை தாங்கிய சிறிகாந்தலிங்கம், பத்மநாப ஐயர் ஆகியோர் பேசுகின்றனர்.**

அமைதி குலைந்த நாட்கள் என்ற கவிதைத் தொகுதி யூலை 4ல் லுசியத்தில் வெளியிடப்பட்டது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி அடைந்த 1980களில் அலை, புதுசு சஞ்சிகைகளில் வெளியான நா சபேசன், அ இரவி, இளவாலை விஜயேந்திரன், பா பாலசூரியன் ஆகியோரது கவிதைகளின் தொகுப்பாக இது வெளிவந்தது. ஏழு பிறமொழிக் கவிஞர்களதும் 24 ஈழத்து கவிஞர்களதும் 70 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்று உள்ளது.

வழக்கறிஞர் சிறிகாந்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இவ்வெளியீட்டு நிகழ்வில் பத்மநாபஐயர், மு நித்தியானந்தன் ஆகியோர் நூல் ஆய்வை மேற்கொண்டனர். இக்கவிதைகளின் படைப்பாளிகளில் ஒருவரான ரவி அருணாச்சலாம் கலந்து கொள்ளாததை பத்மநாபஐயர் சுட்டிக்காட்டினார். அவரை அடுத்துப் பேசிய மு நித்தியானந்தன் இவ்வாறான செயற்பாடுகளை வரவேற்பது தான் கருத்துலக நாகரீகம் என்று குறிப்பிட்டார். இத்தொகுப்பு கால் நூற்றாண்டுக்குப் பின் வெளிவந்தாலும் இது ஒரு முக்கியமான ஆவணம் என எல்லோரும் பாராட்டினர்.

1979க்களில் தமது 16 வயதுகளில் தனக்கும் தனது நண்பர்களுக்குமிடையே ஏற்பட்ட அரசியல் ஈடுபாட்டை நினைவுகூர்ந்தார் சபேசன். அன்றைய காலகட்டங்களில் மகாஜனாக் கல்லூரி ஒரு எதிர்ப்பியக்கம் போல் செயற்பட்டதாகவும் ஆசிரியர்களும் மாணவர்களும் புரட்சியாளர்களாக மாறியதாகவும் சிறிகாந்தலிங்கம் தெரிவித்தார்.

விழாவின் ஆரம்பத்தில் மாற்று திரைப்படம் காட்டப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதும் அத்திரைப்படம் தடங்கல் காரணமாகக் காண்பிக்கப்படவில்லை. அதனால் விழாவுக்கு வந்த சிலர் இரு மணிநேரம் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. ஏனையபடி விழா இனிதே நடந்தேறியது. முடிவில் இராப்போசனம் பரிமாறப்பட்டது.

# எசெக்ஸில் கலைமாலை

எசெக்ஸ் தமிழ்க்கழக மாணவ, மாணவிகளின் கலைமாலை யூன் 12ல் நடைபெற்றது. 5வது ஆண்டாக நடைபெற்ற இவ்விழாவில் நடனம் தாளளய நாடகம், வில்லுப்பாட்டு பட்டிமன்றம், தாளவாத்தியம், இசையமுதம் எனப் பல்சுவை நிகழ்ச்சிகள் இடம்பெற்றது. பாக்கிங் அபே கொம்பிறிகென்சிவ் பள்ளியில் நடைபெற்ற இவ்விழவில் பெற்றோரும் உற்றாரும் கலந்து மாணவர்களை ஊக்குவித்தனர்.

## ஜனநாயக ஒன்றியத்தின் சந்திப்பு

இலங்கை அரசியலில் மாற்றுக் கருத்துடையோரின் அமைப்பாக செயற்படும் ஜனநாயக ஒன்றியத்தின் சந்திப்பு யூலை 10ல் வோல்தம்ஸ்ரோவில் உள்ள வில்லியம் மொறிஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ், முஸ்லீம் சமூகங்களைச் சேர்ந்த அரசியல் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் அண்மைக்காலமாக மட்டுநகரில் இடம்பெற்று வரும் கொலைகள், தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# தமிழ் தேசியவாதம்




*நூலாசிரியர் கலாநிதி முருகர் குணசிங்கம் விமர்சகர் கலாநிதி நித்தியானந்தன்*

தமிழ் தேசியவாதம் என்ற தலைப்பில் கலாநிதி முருகர் குணசிங்கம் மேற்கொண்ட ஆய்வு தமிழில் நூல் வடிவில் வெளியிடப்பட்டது. அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப்பட்டத்துக்கு மேற்கொண்ட ஆய்வை முருகர் குணசிங்கம் ஆங்கிலத்தில் வெளியிட்டிருந்தார். இதனை ஆங்கில ஆசிரியரான பாலமனோகரன் தமிழுக்கு மொழிபெயர்த்திருந்தார். இந்நூலின் வெளியீட்டு விழா ரூற்றிங்கில் யூன் 26ல் இடம்பெற்றது. விமர்சகர் யமுனா ராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் சத்தியமூர்த்தி, வழக்கறிஞர் பரமலிங்கம், கலாநிதி மு நித்தியானந்தன் ஆகியோர் நூலை ஆய்வு செய்தனர். இந்நூல் இதுவரை வெளிவந்திராத தகவல்களைக் கொண்டிருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டனர்.

ஆனால் தமிழ் தேசியவாதத்தின் உறுதித்தன்மை ஆறுமுகநாவலர் பற்றிய முருகர் குணசிங்கத்தின் மதிப்பீடு பற்றி கலாநிதி நித்தியானந்தன் கேள்வி எழுப்பினார். அறுமுகநாவலர் சாதியத்தை உறுதியாக பிடித்திருந்தது, தமழர்களின் ஆட்சிக்காலத்திலும் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள் என்பவற்றை அந்நூலில் இருந்தே கலாநிதி நித்தியானந்தன் எடுத்துக் காட்டினார். மொழி பெயர்ப்பின் போது நூலாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் இணைந்து செயற்படுவதன் அவசியத்தை யமுனா ராஜேந்திரன் சுட்டிக்காட்டினார். இலங்கை வரலாற்றை அனுபவித்திராத ராஜேந்திரன் அதனை தனது தலைமையுரையிலேயே சுட்டிக்காட்டினார். அதனால் அவர் நூலை தேசியவாதம் என்ற பரந்த மட்டத்தில் ஒப்பீடு செய்ய முற்பட்டார்.

# தேம்ஸ்க்கு சபாஸ்

பருவ காலங்களை ஒட்டி வெளிவரும் சிறார்களின் தேம்ஸ் இதழ் இரண்டு யூனில் வெளிவந்துள்ளது. இதன் வெளியீட்டை தேம்ஸ் சிறார்களே ஒழுங்குபடுத்தி நடத்தி உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பெற்றோரும் உற்றாரும் கூட இந்நிகழ்ச்சிகளில் அனுமதிக்கப்படவில்லை. தங்களது உணவுகள் முதல் விழா ஏற்பாட்டின் சகல தெரிவுகளையும் இச்சிறார்களே மேற்கொண்டு உள்ளனர் என்பது மிகவும் வித்தியாசமான பாராட்டத்தக்க விடயம். சபாஸ் தேம்ஸ்.

உதயனின் ஆக்கபூர்வமான விமர்சனங்களுக்கு நன்றி தெரிவித்துள்ள இந்த சிறுவர்கள் இவ்விதழில் சில மாற்றங்களைச் செய்துள்ளார்கள். படைப்பாளிகளின் பெயர், வயது என்பன குறிப்பிடப்பட்டு உள்ளது. ஆக்கங்கள் ஓவியங்களுடன் வெளிவந்து உள்ளமை நன்றாக உள்ளது. வடிவமைப்பில் சற்று குழந்தைத்தனத்தை புகுத்தினால் நன்றாக இருக்கும். பாரதி தமிழ் பாடசாலையின் இந்த முயற்சியை ஏனைய பாடசாலைகளும் பின்பற்றுவது நன்று. அப்பள்ளியின் பெற்றோரும் ஆசிரியர்களும் நிச்சயமாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்கிறார் அவர்களின் நெருங்கிய நண்பர் கதிரேசன். அடுத்த உதயனில் பாரதி தமிழ் பள்ளி ஆசிரியர்களுடனான சந்திப்பு இடம்பெறும்.

# புலம்பெயர் வாழ்வுமுறை தாயகத்தில் சொற்போர்

## எழுதுபவர் : எஸ் ஆர் சஞ்ஜீவ் (இலண்டன்)



கம்பவாருதி ஜெயராஜ்

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் சமூக, கலாச்சார, பண்பாட்டு வாழ்வியல் பற்றி தாயகத்தில் வெவ்வேறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்படுகிறது. அவை சில சமயம் சொந்தக் கருத்துக்களாகவும், சில சமயம் தப்பான தகவல்களால் உருவான கருத்துக்களாகவும் சில சமயம் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட அனுபவங்களில் எழுந்த கருத்துக்களாகவும் அமைகின்றது. புலம்பெயர்ந்த சமூகம் பற்றிய கருத்துக்கள் தாயகத்தில் பலதரப்பினராலும் வெளியிடப்படுகிறது.

தமிழின் வாழ்வு என்பது தமிழர்கள் தமிழர்களாக வாழ்வதிலேயே தங்கியுள்ளது என்று குறிப்பிட்ட புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை; ஆனால் தமிழனின் கனவு ஹவாய் என்றும் நயகரா என்றும் தான் நீள்கிறது என்று கவலை வெளியிட்டார். யூன் இறுதிப்பகுதியில் திருமலையில் குழந்தைகளுக்குத் தமிழ் பெயர் சூட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இக்கருத்தை வெளியிட்டார். தமிழ்ப் பெயர் சூட்டிக் கொண்டவர்களுக்கு கனடாவில் உள்ள சிலம்பம் அமைப்பு சன்மானம் வழங்கியது.

இலண்டன் மற்றும் மேற்கு நாடுகளுக்கு அடிக்கடி வந்து செல்லும் கம்பவாருதி ஜெயராஜ் புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிக் கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தினார். புலம்பெயர்ந்த சிறார்கள் பேசும் நெளிவு சுளிவான தமிழ்மொழி, அவர்களின் கவர்ச்சிகரமான ஆடை அலங்காரங்கள், வழிபாட்டு முறைகள் இவற்றையெல்லாம் நளினமாகவும் கிண்டலாகவும் விமர்சித்து, வராதே! வரவல்லாய்... என்று எழுதினார். அதாவது உனக்கு தாயகத்துக்கு வந்து போவதற்கு வசதிகள் இருக்கிறது ஆனால் நீ வராதே என்று தெரிவிக்கிறார் கம்பவாருதி. ஆனால் இவருடன் முன்னர் இணைந்து இருந்த சொற்பொழிவாளர் ஆறு திருமுருகன் புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றி கம்பவாருதி ஜெயராஜ்ற்கு முற்றிலும் எதிர்மாறான கருத்தைக் கொண்டிருக்கிறார்.

கம்பவாருதி போல் ஆறு திருமுருகனும் அடிக்கடி இலண்டன் உட்பட ஏனைய மேற்கு நாடுகளுக்கு வந்து போகின்றவர். எங்கள் நாட்டில் நாம் கலாச்சாரப் பண்பாடுகளை இழந்து வருகின்றோம். இங்கு ஆலயங்களில் ஆண்கள் வேட்டி சால்வை அணிந்தும், பெண்கள் சேலை அணிந்தும் வருவது அருகி வருகின்றது. ஆனால், ஆங்கிலேயருடைய நாடான கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களிடையில் பண்பாட்டு அடையாளங்கள் பேணப்பட்டு வருகின்றன என்று காரைநகரில் இடம்பெற்ற சைவப் பெரியார் விசுவலிங்கம் அவர்களின் பாராட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஆறு திருமுருகன் தெரிவித்தார். கனடாவில் உள்ள சைவ ஆலயங்களுக்கு ஆண்கள் வேட்டியும், பெண்கள் சேலையும் அணிந்து தமிழ் மக்களின் பாரம்பரிய கலாச்சார உடைகளில் வருகின்றனர். ஆனால், நாம் எமது மண்ணில் உள்ள கோயில்களில் பஞ்சாபி அணிந்த பெண்களையும், நீளக்காற்சட்டை அணிந்த ஆண்களையுமே காண முடிகின்றது. கனடாவில் எம்மவர்கள் பிறந்த நாளைக் கொண்டாடும் போது பிரசாதம் வைத்து வாழ்வில் ஒளிபெற தீபம் ஏற்றி, பிறந்தநாளை கொண்டாடுபவருக்குப் பிரசாதம் ஊட்டி மகிழ்கின்றனர். ஆனால், இங்குள்ளவர்கள் கேக்வெட்டி மெழுகுதிரியில் உள்ள தீப ஒளியினை வாயினால் ஊதி அணைத்து எமது பாரம்பரியங்களுக்கு எதிரான முறையில் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர். எமது தாயக மண்ணில் இன்று கொலை, கொள்ளை, பாலியல் வன் முறைகள் போன்ற பஞ்சமாபாதகச் செயல்கள் தலைதூக்கியுள்ளன. பழந்தமிழ் மண்ணில் பரம்பரை பரம்பரையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த பண்பாட்டு விழுமியங்கள் சீரழிந்து சினிமா கலாச்சாரமும், சீர்கெட்ட சமூகப் பிறழ்வு நடத்தைக் கோலங்களும் மேலோங்கி வருகின்றன என ஆறு திருமுருகன் புலம்பெயர்ந்தவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கி உள்ளார்.

புலம்பெயர்வின் ஆரம்பகாலங்களில் விடுதலைப் புலிகளும் புலம்பெயர்பவர்கள் பற்றி கடுமையான விமர்சனங்களையே வைத்திருந்தனர். அவ்விமர்சனங்களை வைத்துக் கொண்டு நிதி சேகரிப்பில் ஈடுபடுவதிலும் ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் பலத்த நெருக்கடிகள் நிலவியது. அதனால் புலிகள் தமது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தற்போது மாவீரர் தின உரைகளிலேயே புலம்பெயர்ந்தவர்களின் பங்களிப்புப் பற்றி வெகுவாகப் பாராட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.

# நாடகவிழாவும் சுழற்றி வீசும் அவைக் காற்றுக்கழகமும்

தமிழ் அவைக்காற்றுக்கழகத்தின் இவ்வாண்டு நாடக விழா கரோ வின்ஸ்ரன் சேர்ச்கில் மண்டபத்தில் யூலை 17ல் நடைபெற்றது. செழியனின் வேருக்குள் பெய்யும் மழை, பெருங்கதையாடல் சேரனின் அவன்-அவள், மாவை நித்தியானந்தனின் அவசரக்காரர் ஆகிய நாடகங்கள் விழாவில் இடம்பெற்றது. இந்நான்கு நாடகங்களையும் க பாலேந்திரா நெறியாள்கை செய்திருந்தார். ஆனந்தராணி பாலேந்திரா, தர்சினி சிவசுதன், ச வாசுதேவன், பா சத்தியேந்திரன், கு ரமேஸ், மானசி பாலேந்திரா, ரதி தேவாசீர்வாதம் ஆகியோர் இந்நாடகங்களில் அரங்கேறினர். நகைச்சுவையுடன் சிந்தனையைக் கிளறும் வகையில் இந்நாடகங்கள் அமைந்ததாக அவைக்காற்றுக்கழகத்தின் ரசிகர் ஒருவர் தெரிவித்தார்.

அவைக்காற்றுக் கழகம் கடந்த 25 வருடங்களாக இலங்கை, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தங்களது நாடகங்களை மேடையேற்றி வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு இக்கழகத்தின் நீண்டகால நடிகர், மேடை அமைப்பாளர், ஓவியர் கிருஷ்ணராஜா ஓரங்கட்டப்பட்டமை தெரிந்ததே. 20 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த அமைப்பில் இருந்து எந்தவித காரணமும் தெரிவிக்கப்படாமல் ஜனநாயக விரோதமாகத் கிருஷ்ணராஜா ஓரங்கட்டப்பட்டதாக அவைக்காற்றுக் கழகத்துடன் நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்டு நாடகவிழாவுக்கு முதல்நாள் கிருஷ்ணராஜா ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்ட முற்பட்டார். ஆனால் கிருஷ்ணராஜா விடயத்தை சுமூகமாகத் தீர்க்க இருதரப்புடனும் தொடர்ப்பில் உள்ள சிலர் முயற்சி எடுத்தனர். அது பலனளிக்கவில்லை. இந்நிலையில் தனக்கு நியாயம் கிடைக்காவிட்டால் அதற்கு ரசிகர்கள் மத்தியில் பதில் சொல்ல வேண்டி இருக்கும் என கிருஷ்ணராஜா தெரிவித்து உள்ளார். இதனை வேறுகோணத்தில் அணுகிய அவைக்காற்றுக் கழகம், நாடகவிழாவுக்கு பாதுகாப்பு வழங்க தனியார் நிறுவனம் ஒன்றை ஏற்பாடு செய்தனர்.

தற்போது அவைக் காற்றுக் கழகம் முற்றிலும் புலம்பெயர்ந்த மண்ணில் கண்டெடுத்த கலைஞர்களுடன் தன்னை ஸ்திரப்படுத்தி வருகின்றது. புலம்பெயர்ந்த நாடுகளில் அவைக்காற்றுக் கழகம் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்திருந்தது. ஆனால் இவ்வாறான கொந்தளிப்பான சூழல் அவ்வமைப்பின் எதிர்காலத்தக்கு எந்த வகையிலும் உதவுவதாக இல்லை என சிலர் தெரிவிக்கின்றனர்.

# எட்மன்டனில் பரிசளிப்பு

Tamil Relief Centre இன் பிரிவான Enfield Education & Training Centre இன் பரிசளிப்பு விழா யூன் 26ல் எட்மன்டனில் நடைபெற்றது. ரிஆர்சி இயக்குநர்களில் ஒருவரான ரி ஜீவரட்ணம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். இக்கல்வி மற்றும் தொழில் பயிற்சி மையத்தில் தமிழ், துருக்கி, பங்களாதேஸ், மற்றும் இந்தியர்கள் என பல்லினத்தவர்களும் பயில்கின்றனர்.

# கவிஞர் நாகேந்திரன் : அஞ்சலி

கவிஞரும் தமிழ் ஆசிரியருமான செ நாகேந்திரனின் அஞ்சலிக் கூட்டம் யூலை 4ல் மனோபார்க்கில் நடைபெற்றது. சுடரொளி வெளியீட்டகம் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. யூன் 5ல் மனோபார்க்கில் உள்ள தனது இல்லத்தில் கவிஞர் நாகேந்திரன் அகால மரணமானார். இவரது இறுதிக் கிரியைகள் யூன் 12ல் நடைபெற்றது. உணர்வுகள் என்ற கவிதைத் தொகுதியையும், கீர்த்தனைகள், ஆத்ம அலைகள் என்ற இரு பக்திப் பாடல்களின் தொகுதியையும் இவர் 2000ம் ஆண்டில் வெளியிட்டார். இயேசுபிரான் பற்றிய சுவையான கவிதைகள் என்ற நூல் 2001ல் வெளியிடப்பட்டது. செ நாகேந்திரனின் கவிதைச் சரம் என்ற கவிதைத் தொகுதி இறுதியாக 2002ல் வெளியிடப்பட்டது.

**Palm Restaurant**
Srilankan & South Indian Cuisine
சுவை, சிக்கனம், சேவை, நிறைவு
VEG or NON VEG
*Party orders Welcome From anywhere*
Kandiah Rajarathnam
(T) 020 8520 7465
102, Palmersston Road, Walthamstow E17 6PZ

# துஸ்டரைக் கண்டால் தூர விலத்துங்கள்

துஸ்டரைக் கண்டால் பொலிசாருக்கு தகவல்களைக் கொடுத்துவிட்டு தூர விலத்தும் படி தமிழ் இளைஞர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளனர். பொலிஸ் நடவடிக்கைகளில் அப்பாவி இளைஞர்கள் மாட்டிக்கொள்வதைத் தடுக்க இதுவே சிறந்த வழியென தமிழ் சமூகத் தலைவர்கள் கேட்டக் கொள்கின்றனர். மேலும் கைது செய்யப்படுபவர்களின் குடியுரிமை உடனடியாக பரிசோதிக்கப்படுகிறது. குடியுரிமை அந்தஸ்து அற்றவர்கள் அவர்கள் வேறு எந்தக் குற்றமும் செய்திருக்காவிட்டாலும் அவர்கள் குடிவரவு காரணங்களுக்காகத் தடுத்துவைக்கப்படலாம் என தமிழ் நடவடிக்கைக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். தங்களின் நோக்கம் குடியுரிமையறவர்களைக் கைது செய்வதில்லை என்பதை அழுத்தமாகத் தெரிவித்தள்ள அவ்வதிகாரி பொலிஸ் நடவடிக்கையில் அவர்கள் மாட்டிக்கொள்ளும் பட்சத்தில் பொறுப்பான அதிகாரிகளிடம் கையளிக்கும் சட்டப்பொறுப்பு தனக்கு இருப்பதாகத் தெரிவித்தார்.

பிரித்தானியாவில் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சகலவிதமான குடியுரிமை அனுமதியும் முடிவடைந்த நிலையில் மறைந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளனர். இவர்களை குறிவைத்து எந்த பொலிஸ் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை அவ்வதிகாரி உறுதிப்படுத்தினார். தங்களுக்கு குடியுரைமை அற்றவர்கள் பற்றி அக்கறையில்லை எனக் குறிப்பிட்ட அவ்வதிகாரி அவ்வாறானவர்கள் மாட்டிக் கொள்ளும் போது அவர்களை விடுவிக்க சட்டம் அனுமதிகாததாகையால் தாங்கள் அதற்குப் பொறுப்பானவர்களிடம் ஒப்படைப்போம் எனத் தெரிவித்தார்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பவர்கள், குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் குடியிருக்கும் வீடுகளில் தங்கி இருப்பவர்கள், குற்ங்களில் ஈடுபட்டவர்களுடன் வாகனங்களில் பயணம் செய்பவர்கள், குற்றச்செயல்களில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களில் பயணம் செய்வது என்பன கைது செய்யப்படுவதற்கும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கும் காரணமாகலாம் என தமிழ் இளைஞர்கள் எச்சரிக்கப்படுகின்றனர்.

# இலண்டனில் 2000 ஈழத் தமிழ் நூல்கள் தொகுக்கப்பட்டு உள்ளது




இலண்டனில் 2000 ஈழத் தமிழ் நூல்கள் தொகுக்கப்பட்டு உள்ளது. நூலகவியலாளர் என் செல்வராஜாவின் முயற்சியால் உருவாக்கப்பட்ட 1,000 ஈழத் தமிழ் நூல்களின் தொகுப்பு - நூல்தேட்டம் தொகுதி தற்போது வெளிவந்து உள்ளது. 1000 நூல்கள் கொண்ட முதற் தொகுதி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் நூலியல் பற்றிய 'பிரசுரகளம்' என்ற மலர் யூன் மாதம் முதல் மேற்படி ஆசிரியரால் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் நூல்கள், எழுத்தாளர்கள், நூல் வெளியீட்டு விழாக்கள், வெளியீட்டாளர்கள் பற்றிய தகவல்கள், ஆய்வுகள், நிகழ்ச்சித் தொகுப்புகள் என்பன இடம்பெற உள்ளது. முற்றிலும் நூல்கள் தொடர்பாக வெளிவர உள்ள முதல் ஈழத்து தமிழ் இதழ் இதுவாகவே உள்ளது.

மேலும் என் செல்வராஜா மலேசியத் தமிழர்களுக்கான மலேசியத் தமிழ் நூல்தேட்டத்தை கொண்டுவருவதற்கும் ஆலோசனை வழங்கி வருகிறார். கடந்த ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற மலேசியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் குறிப்பிடப்பட்டது போல் இரு தமிழ் சமூகங்களுக்கும் இடையே பரஸ்பரம் நட்புறவை ஏற்படுத்தும் அடிப்படையில் இவ்வேலைத்திட்டம் அமைந்து உள்ளது. இது தொடர்பாக யூலை முற்பகுதியில் என் செல்வராஜா மலேசியா செல்ல உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# லண்டனில் உள்ள காதலனுக்காக யாழ் இளைஞர் பெண்ணானார்

UKயில் உள்ள தனது காதலனை மணப்பதற்காக யாழ் இளைஞர் ஒருவர் பெண்ணாகி உள்ளார். தன்னைப் பெண்ணாக மாற்றுவதற்காக அவ் இளைஞர் கொழும்பிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் பிளாஸ்ரிக் சிகிச்சை மேற்கொண்டார். லண்டனில் உள்ள இளைஞரும் யாழ் இளைஞரும் நீண்டகால நண்பர்கள். அந்த நட்புக் காதலாக மாறி தற்போது திருமணம் வரை சென்றுள்ளது. பெண்ணாக மாற விரும்பிய யாழ் இளைஞனின் உடலுறுப்புக்கள் சில நீக்கப்பட்டதுடன் பெண் தன்மைக்குரிய ஹோர்மோன்களைத் தூண்டுவதற்கான சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன. சிகிச்சையை முடித்துக் கொண்ட இளைஞர் விரைவில் UK பயணமாகவுள்ளார்.

# சிலுமிசம் செய்த மருத்துவருக்கு பேர்ன்மோத்தில் தண்டனை

பாலியல் சிலுமிசத்தில் ஈடுபட்ட தமிழகத்தைச் சேர்ந்த மருத்துவர் ஒருவருக்குத் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. கருணாநிதி என அழைக்கப்படும் இவர் அண்மைக்காலமாக ஈஸ்ற்காம் பகுதியில் வாழ்ந்தவர். தன்னை ஓர் அரசியல் ஆர்வலராகவும் காட்டி வந்தார். இவர் சிறு பெண்ணுடன் பாலியல் சிலுமிசத்தில் ஈடுபட்டதற்காக தண்டிக்கப்பட்டு உள்ளார். இதற்கான தண்டனை கடந்த மாதம் பேர்ன்மோத் நீதிமன்றில் வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் பேர்ன்மோர்த்தில் இடம்பெற்ற தொழிற்கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற கருணாநிதி அப்பகுதியில் பஸ்ஸில் பயணம் செய்த போது வயது குறைந்த சிறுமி ஒருவருடன் சிலுமிசம் செய்துள்ளார். இதனை அப்பெண் பஸ்ஸால் இறங்கியதும் பொலிஸிற்கு தெரிவித்து உள்ளார். கருணாநிதி சிலுமிசத்தில் ஈடுபட்டதை பின்னால் இருந்த இளம்தம்பதிகள் அவதானித்து உள்ளனர். அவர்கள் அச்சிறுமிக்காகச் சாட்சியமளித்தனர்.

யூன் மாதம் தீர்ப்பளிக்கப்பட்டதையடுத்து கருணாநிதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்.

# இலண்டன் வானொலியின் இலங்கை ஒலிபரப்பு நிறுத்தம்

இலண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ரிபிசி இன் ஒரு மணிநேர இலங்கை ஒலிபரப்பு யூலை 17 முதல் தடைப்பட்டு உள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரப் பீரங்கியாக இயங்கிய இவ்வானொலி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையூடாக ஒரு மணி நேரம் ஒலிபரப்பப்பட்டு வந்தது. விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட கிளர்ச்சியை முழுவீச்சில் இவ்வானொலி வெளிப்படுத்தியதன் மூலம் தனக்கென பெரும் கேட்போரைப் பெற்றிருந்தது. அண்மைக்காலமாக புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் இவ்வானொலிச் சேவையை நிறுத்த வேண்டும் என்று கோரி இருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வானொலிக்கு எதிரான முழுவீச்சுடனான பிரச்சாரத்தை புலிகளின் ஆதரவு அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.


தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாகவே இச்சேவை தடைப்பட்டு இருப்பதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்சேவை இயக்குநர் ருத்திரபதி, ரிபிசி பணிப்பாளர் ராம்ராஜ்க்கு தெரிவித்து உள்ளார்.

# பிரித்தானிய விசா வழங்க இலங்கையில் புதிய நிலையம்

விசா விண்ணப்பிப்போருக்கு பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் கொழும்பில் புதிய விசா விண்ணப்ப நிலையமொன்றை அமைத்துள்ளது. யூலை 22 முதல் இயங்கும் இந்நிலையத்தில் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நேர எல்லை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், விசா தொடர்பான தகவல்களும் வழங்கப்படும். நிலையம் பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் அனுமதியுடன் இயங்கும் ஒரு முகவர் நிறுவனத்தினால் இயக்கப்படுகின்றது. இந்நிறுவனத்தினர் வழிகாட்டுதலை வழங்கவும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளவும் மட்டுமே பொறுப்புடையவர்களாயிருப்பர். வழமையான விசா கட்டணத்துக்கு மேலதிகமாக ஒரு கடவுச்சீட்டுக்கு இலங்கைப் பணமாக 920 ரூபா சேவைக் கட்டணம் அறவிடப்படும் எனத் தெரிகிறது.

மேலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போதே விண்ணப்ப நிலையத்தில் அவர்களது விரலடையாளங்கள் பெற்றுக் கொள்ளப்படும். அதன் பின் விண்ணப்பம் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திலுள்ள விசா அதிகாரி ஒருவரால் பரிசீலிக்கப்படும். விண்ணப்பதாரிகள் நேர்முக விசாரணைக்கு வர வேண்டிய சந்தர்ப்பங்களில் நேரம் ஒதுக்கப்பட்டு விசாரிக்கப்படுவார்கள். நேர்முக விசாரணை தேவைப்படுமானால், அதற்குரிய நேரமும் நிலையத்தில் வைத்தே வழங்கப்படும். சனநெரிசலை கட்டப்படுத்தும் வகையில் இப்புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

# போதைப்பொருள் கடத்தியவருக்கு 7 ஆண்டுகள் சிறை



போதைப்பொருள் கடத்தல்காரர் நடராஜா

போதைப் பொருள் கடத்திய இலங்கையரான மில்றோய் நடராஜா (33) என்பவருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. இவரது கடத்தல் குழுவைச் சேர்ந்த மேலும் மூவருக்கும் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. குழுவின் தலைவர் வைட்வே வில்கின்சன் (32)க்கு 12 ஆண்டுகளும் ரொம் கொன்னல் (30)க்கு 8 ஆண்டுகளும் ஜேம்ஸ் லோங் (31)க்கு 9 ஆண்டுகளும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. யூலை 9ல் சதேக் கிறவுண் கோட்டில் இவ்வழக்கு விசாரணை இடம்பெற்றது.

பொறியியலாளரான நடராஜா ஒரு ரக்கோட் தயாரிப்பாளர். இவர் வட இலண்டன் கொக்போஸ்ரர்ஸ் பகுதியில் உள்ள கேம்ஸ் றோட்டில் £1.2 மில்லியன் பெறுமதியான வீட்டை வாங்கி உள்ளார். வருமான வரித்துறையினர் கடந்த ஆண்டு விசாரணை மேற்கொண்ட போது 2002/2003ல் தனது ஆண்டு வருமானம் £7,943 மட்டுமே என்று தெரிவித்து உள்ளார். கடந்த ஆண்டு செப்ரம்பர் 5ல் புலனாய்வு பொலிசார் நடராஜாவை கைது செய்தனர்.

இப்போதைப் பொருள் கடத்தல் கும்பல் பெரும்தொகையான போதைப்பொருளை விற்றுள்ளதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். கொக்கெயின், எக்ரசி மாத்திரைகள், கனப்பிஸ் போன்ற மாத்திரைகளை இவர்கள் தலைநகரில் உள்ள பிரபலங்களுக்கு விற்றுள்ளனர். இவர்கள் கடந்த 14 ஆண்டுகளாக இந்த கடத்தல் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக பொலிசார் நம்புகின்றனர். மே 2002 முதலான 13 மாதங்களில் மட்டும் இவர்கள் £7 மில்லியனை கொக்கெயினில் முதலிட்டு இருந்ததாகத் தெரியவருகிறது. இக்கும்பலிடம் இருந்து £4.5 மில்லியன் பெறுமதியான சொத்துக்களும் உடமைகளும் கைப்பற்றப்பட்டு உள்ளது. மேலும் £4.5 மில்லியன் இலபத்தை வெளிநாட்டு வங்கிகளில் இவர்கள் வைத்திருக்கலாம் என புலனாய்வுப் பிரிவினர் நம்புகின்றனர். அதற்கான தேடுதல் தொடர்ந்தும் நடைபெறுகிறது.

# பூபாளராகங்கள் 2004

யாழ் கொம்மாந்துறை கம்பர்மலை வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் நடாத்தும் பூபாளராகங்கள் 2004 ஓகஸ்ட் 14ல் கிறீன்போட்டில் நடைபெற உள்ளது. 5வது ஆண்டாக நடைபெறும் இந்நிகழ்வுக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் இ இரகுநாதன் தலைமை தாங்குகிறார். நாட்டியாலயாவின் நாட்டியக் கலை அரங்கம், அவைக்காற்றுக் கழகத்தின் நாடகம், வழக்காடு மன்றம், கான மழை ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

உங்களின் வரி விளம்பரங்களுக்கு
உதயன் 020 8952 5677

INDIAN FUNERAL DIRECTORS

We now operate from our new, modern & fully equipped premises on Mollison Way, Edgware.

Our comprehensive service includes:-

- Large prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
- All religious rites, ceremonies and wishes respected and administered
- Modern, fully equipped washing & dressing facilities
- Funeral ceremony items provided

Tel: 020 8952 5252

SANJAY or BHARAT SHAH (formerly of Kenton Road)
44 South Parade, Mollison Way, Edgware,
Middlesex HA8 5QL.
MOBILE: 0777 030 66 44

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

MASSIVE SALE




MASSIVE SALE

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1 Importers, Distributors, Wholesalers and Retailers of






















*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway, West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

# கொழும்பின் தகவலில் இலண்டன் வாசி சிறையில்

கொழும்பில் பொலிசார் வழங்கிய தகவலின் அடிப்படையில் இலண்டன் வாசி ஒருவர் கைது செய்யப்பட்டு தற்போது சிறை வைக்கப்பட்டு உள்ளார். பிரெயின் பார்னல் (66) என்பவரே 16 வயதுக்குக் குறைந்த ஆணை பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுத்தியது மற்றும் ஒழுக்கமற்ற நடவடிக்கைக்கு உட்படுத்த முயற்சித்தது போன்ற குற்றங்களுக்காக 2 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டு உள்ளார். யூன் 2ல் பிரெயின் பார்னலுக்குத் தீர்ப்பளித்த இலண்டன் நீதிமன்றம் பாலியல் குற்றவியலாளர்கள் பட்டியலில் பிரெயின் பார்னலைச் சேர்க்க உத்தரவிட்டது.

2002ல் ஒபேரா இசைக் குழுவுடன் தெற்காசியாவுக்கு விஜயம் மேற்கொண்ட பிரெயின் இளம் பையன்களை தன்னுடன் தொடர்பு கொள்ளும்படியான கவர்ச்சிகரமான விளம்பரம் ஒன்றை இணையத்தளத்தில் வெளியிட்டிருந்தார். பிரெயினின் செய்தியை இலங்கையில் உள்ள சிறார் பாலியல் குற்றங்களுக்கு எதிரான அதிகாரிகள் அவதானித்தனர். தங்களை ஒரு 15 வயதுச் சிறுவனாகக் காட்டி அவ்வதிகாரிகள் பிரெயினுடன் தொடர்பு கொண்டனர். அதற்கு சில மணிநேரத்தில் பதில் ஈ-மெயில் அனுப்பிய பிரெயின் தான் பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படங்களையும் இணைத்திருந்தார்.

துரிதமாகச் செயற்பட்ட இலங்கை காவல்துறை பிரெயினின் இருப்பிடத்தைப் பிடித்தது. ஆனால் இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டப்படி பிரெயின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அதனால் பிரெயினை நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டனர். அதே நேரம் தங்களிடம் உள்ள தகவல்களை பிரித்தானிய பொலிசாருக்கு கையளித்தனர். பிரித்தானியாவில் 1996 பாலியல் குற்ற சட்டத்தின் கீழ் பிரெயின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# கனடியத் தேர்தலில் தமிழர் தோல்வி

கனடியத் தேர்தலில் போட்டியிட்ட இலங்கைத் தமிழர் தோல்வி அடைந்தார். தமிழ் மக்கள் செறிந்து வாழும் ஒன்ராரியோ மாநிலத்தின் மேன்டோன்வலி தொகுதியில் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் டேவிட் தோமஸ் போட்டியிட்டார். மேற்குலகின் குட்டி ஈழம் என்று வர்ணிக்கப்படும் கனடாவில் 500,000 தமிழர்கள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் ஒன்ராரியோவில் செறிந்து வாழ்கிறார்கள்.

# கூண்டில் ஏறியது நட்பு
## கரோ நீதிமன்றத்தில் முன்னாள் நண்பர்கள்

இலண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ரிபிசி இல் இணைந்து பணியாற்றிய மூவர் சம்பந்தப்பட்ட வழக்கு யூன் 28 முதல் யூலை 5 வரை நடைபெற்றது. ரிபிசி அறிவிப்பாளர் முகமொட் இர்பான், பணிப்பாளர் ராம்ராஜ் வீரையா ஆகிய இருவரையும் தமோதரம்பிள்ளை அனுசிறிகுமார் (ராஜன்) கொலை செய்யப்போவதாக பயமுறுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டு இருந்தார். வார்த்தைகளால் பயமுறுத்தியது (Threatening words), தொந்தரவு செய்தது (Harassment), மிரட்டும் வகையில் நடந்து கொண்டது (Intimidation), ஆகிய மூன்று குற்றங்கள் ராஜன் மீது பதிவு செய்யப்பட்டது. கரோ கிறவுன் கோட்டில் விசாரணை முடிவில் இந்த மூன்று குற்றங்களில் இருந்தும் ராஜன் விடுதலை செய்யப்பட்டார். 12 யூரிகளும் ராஜனை நிரபராதி எனத் தீர்ப்பளித்தனர். ராம்ராஜ், இர்பான் ஆகியோர் நீதிமன்றத்தை துஸ்பிரயோகம் செய்ததற்காக நீதிபதியால் கண்டிக்கப்பட்டனர்.



ராஜன்

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 11 அன்று ராஜன் தங்களைப் பயமுறுத்தியதாக இர்பான், ராம்ராஜ் ஆகியோர் பொலிஸில் முறையிட்டனர். "நான் உன்னைக் கொல்லப் போறேன். நான் அங்க வாறன்" என்று ராஜன் தொலைபேசியில் கூறியதாக இர்பான் வாக்குமூலம் கொடுத்திருந்தார். "அங்கேயே நில். அங்க வந்து நான் யாரெண்டு காட்டுறன்" என ராஜன் தொலைபேசியில் கூறியதாக ராம்ராஜ் தனது வாக்கு மூலத்தில் கொடுத்துள்ளார். பின்னர் அதே தினம் ஓகஸ்ட் 11ல் ராஜன் வானொலி நிலையத்துக்குச் சென்று இப்ரான், ராம்ராஜ் ஆகியோரை நோக்கி சத்தமிட்டுள்ளார். அதனை இப்ரான் பொலிசுக்குத் தெரிவிக்கும் போது ராஜன் அவ்விடத்தை விட்டுச் சென்றுவிட்டார்.

ஓகஸ்ட் 13 அன்று ராஜனின் வீட்டுக்குச் சென்ற பொலிசார் ராஜனைக் கைது செய்தனர். விசாரணையில் தான் தொலைபேசியில் இர்பானுடன் பேசியதாகவும் வானொலி நிலையத்தக்குச் சென்றதாகவும் கூறிய ராஜன் ஆனால் யாரையும் பயமுறுத்தவில்லை எனத் தெரிவித்தார். விசாரணையின் பின் ராஜன் பிணையில் விடுவிக்கப்பட்டார். விடுவிக்கப்பட்ட ராஜன் இரவு 11:30 மணியளவில் தொலைபேசியில் இப்ரான், ராம்ராஜ் ஆகியோரை மீண்டும் மிரட்டியதாகக் குற்றம்சாட்டப்பட்டது. இப்ரான் ராஜனுடன் நடந்த உரையாடலைப் பதிவு செய்து பொலிஸில் ஒப்படைத்தார். ஓகஸ்ட் 14ல் ராஜன் மீண்டும் கைது செய்யப்பட்டார். விசாரணையில் ராஜன் தனது தவறை ஒப்புக் கொண்டார். ஆனால் தான் யாரையும் பயமுறுத்தவிலை எனத் தெரிவித்தார். நண்பர்கள் என்ற முறையில் இந்த வழக்கைக் கைவிடும்படி கேட்பதற்காகவே அவர்களுடன் தொடர்பு கொண்டதாக ராஜன் பொலிசாருக்த் தெரிவித்தார். பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இவ்வாண்டு யூன் 28ல் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட மறுதினம் ராஜனுடைய சாட்சியாக வந்த முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் தம்பி பொபி என்பவர் நீதிமன்றத்தில் வைத்து இர்பானை மிரட்டியதாக முறைப்பாடு செய்ததை அடுத்து ராஜனும் பொபியும் வழக்கு முடியும் வரை தடுத்து வைக்கப்பட்டனர். யூலை 5ல் வழக்கில் ராஜன் நிரபராதி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டதை அடுத்து ராஜனும் பொபியும் விடுவிக்கப்பட்டனர். ராஜனுக்கு சார்பாக வாசுதேவன் நீதிமன்றில் சாட்சியளித்தார்.

**பின்னணி :**

ராஜன், ராம்ராஜ் இருவரும் எட்டு ஆண்டுகளாக மிக நெருங்கிய நண்பர்களாக இருந்து வந்தனர். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் ரிபிசி வானொலி தொடங்கப்பட்டது முதல் ராஜன் அங்கு பணியில் இருந்தார். அப்போது வானொலியில் இணைந்து கொண்ட இப்ரானும் ராஜனின் நண்பரானார். கடந்த ஆண்டு நடுப்பகுதியில் ரிபிசி வானொலியில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. முழுநேர அறிவிப்பாளர் ஒருவர் குடியுரிமை அனுமதி மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார். இதற்கு ராம்ராஜின் அசமந்த போக்கு ஒரு காரணம் எனச் சிலர் குற்றம்சாட்டினர். அதேசமயம் பணிப்பாளர் ராம்ராஜின் தனிப்பட்ட அரசியல் நோக்கங்கள் வானொலியில் புகுத்தப்படுவதாக் கூறி பல அறிவிப்பாளர்கள் வெளியேறினர். இந்நிலையில் வானொலியின் நிதி நிர்வாகமும் கேள்விக்கு உள்ளானது. இந்நிலையில் ஒருவருக்கொருவர் எழுந்த பகைமை வாய்த்தர்க்கமாகி நீதிமன்றத்தில் வந்து நின்றது. வழக்குக்கு முன்னர் நீதிமன்றத்துக்கு வெளியே இதனைத் தீர்க்க முற்பட்ட போதும் அது பலனளிக்கவில்லை.

UXBRIDGE
CARPETS & FURNITURE LTD
2 Double, 1 Single, 3 Wanderbeds, 4 Chairs, 1 Dining table, 1 Cofee table, 3 Piece Sofa
All just for £999 (including delivery)
(T) 020 8561 8633
(M) 07889 936406
1032 & 1034 Uxbridge Road, Hayes, Middx. UB4 0RJ

Style & Quality
Marble & Granite
Marble
Granites
Limestones
Ceramics
Custom Design & Installation
Kitchen Worktops
Vanity Tables
Wall Finish
Free Consultation & Quotes
52 Standard Road, Park Royal, London NW10 6EU
Tel: 020 8965 1441
www.quickgoldltd.co.uk
QG QuickGold Ltd.

Smart Signs & Blinds LTD.
SIGNS OF ALL KINDS
AWNINGS & CANOPIES
Suitable for both Home & Commercial Premises
0208 900 2873
07940 541 640

ALEC WADLOW & CO
THE DOOR, WINDOW & CONSERVATORY SPECIALIST
Local Family Business
Supplying and Installing
Quality Double Glazing
&
Conservatories
"We care about your home"
19 Village Way East, Harrow, Middx. HA2 7LX
Tel: 020 8866 3366

FUNTASIA
FANCY DRESS & PARTY SHOP
SPECIALIST IN PARTY GOODS
ESTABLISHED SINCE 1984
BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
HELIUM HIRE PACKAGE
PARTY WARE NOVELTIES
BRIDAL FAVOURS SOFT TOYS
FANCY DRESS FOR HIRE & SALE
WINGS, MASKS, MAKE-UP
MAGIC TRICKS & JOKES
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS AND BOOK MATCHES
CAKES MADE TO ORDER
RUBBER STAMPS SERVICES
FIREWORKS
INT'L MONEY TRANSFER
ADULT PRODUCTS FOR HEN NIGHT & STAG NIGHT
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333
email: funtasia@shivex.co.uk
www.funtasiaworld.com

FREE இலவசம்
The UDHAYAN
உதயன்
UK's No.1 National Tamil Newspaper
Advertise in UDHAYAN for best results
020 8952 5677

London College of Management Studies
Professional courses in Harrow:
Business Administration / Travel and Tourism ABE, Accounting CAT/ ACCA
Information Systems IMIS
Full / part time, day / block release
Academic programs: BBA, MBA, DBA.
Qualified, friendly tutors & small classes for success. Free computing / internet.
English Classes (IELTS) Start any time
235B KENTON ROAD, HARROW, HA3 0DH
Tel: 020 8909 1117 / 2100 – Fax: 2120
www.londoncms.com
E-mail: info@londoncms.com

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS gifts Souvenirs and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

இறையருள் அரசி அன்னை காயத்ரி



உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பிணி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்
020 8952 7775
வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கி வல்லவர் இறையருள் அரசி அன்னை காயத்ரி.

RehncyShaheen
Chartered Accountants
www.rehncyshaheen.com
Our Services include
* Auditing
* Cashflow & Management Accounting
* Client Accounting Services
* Business Start-up
* Back Duty Investigation (Tax & VAT)
* Taxation
For Information:
Mr. Rehncy MA FCA FCCA CTA AIIT MCMI ACIArb
Middx. Offices: 020 8864 9065 020 8813 8324
1276/1278 Greenford Road, Greenford, Middx UB6 0HH.
Mr. A M Shaheen MA LLB ACEA MCMI
South London Office 020 7223 8221
189 Lavender Hill, London SW11 5TB

# 29 தமிழ் இளைஞர்கள் கைது

# ஸ்கொட்லன்ட் யாட் அதிரடி நடவடிக்கை

## 100இற்கும் மேற்பட்ட கிறடிட்காட்கள், கொலை ஆயுதங்கள், £70,000 பெறுமதியான பணம் பொருட்கள் மாட்டியது

வன்முறை, கிறடிட் காட் மோசடி, போதைவஸ்து குற்றங்களில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களுக்கு எதிரான பொலிஸ் நடவடிக்கையில் 29 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். யூலை 8 அதிகாலை 4:30க்கு ஆரம்பமான இந்நடவடிக்கை ஒப்பிரேசன் என்வர் - புறுஜஸ் என்று பெயரிடப்பட்டது. இந்நடவடிக்கையில் 500க்கும் மேற்பட்ட பொலிசார் நூற்றுக்கும் மேற்பட்ட சந்தேகநபர்களைத் தேடி வலைவிரித்தனர். நியூகாம், வோல்தம்பொறஸ்ற், றெட்பிறிஜ், குராய்டன், கரோ, பிறன்ற் ஆகிய லண்டன் உள்ளாட்சிப் பிரிவுகளில் உள்ள 22 வீடுகள் பொலிசாரின் முற்றுகைக்கு உள்ளாகியது.






முற்றுகை ஆரம்பமாவதற்கு முன்னர் அதிகாலை 4:30க்கு பொலிசார் ஒழுங்கு செய்த செய்தியாளர் சந்திப்பில் தமிழ் சமூகத்தினர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் இந்நடவடிக்கை ஒழுங்கு செய்யப்பட்டதாக பொறஸ்ற்கேற் பொலிஸ் தலைமை அதிகாரி றோஜர் மொலி தெரிவித்தார். Chief Inspector Steve Marshal சந்தேக நபர்களை பொலிஸ் அதிகாரிகளுக்குக் காட்டி விளக்கமளித்தார். அங்கு பேசிய நியூகாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள வன்முறையை ஒழிக்க பொலிசார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தான் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகக் குறிப்பிட்டார். ஐ நா பாதுகாப்பின் கீழ் தஞ்சம் கேட்கத் தகுதியற்ற குற்றவாளிகளை நாடு கடத்த வேண்டும் என்றும் அதுவே மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்றும் அவர் அங்கு அழுத்தமாகத் தெரிவித்தார்.

சந்தேக நபர்களைக் கைதுசெய்வது, Tamil Hotline ஐ விளம்பரப்படுத்துவது, குற்றச்செயல்களில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களைத் தேடுவது என்ற 3 கட்டமாக யூலை 8 நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நியூகாமில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பூரண வெற்றி அளித்திருப்பதாக அதிகாரி றோஜர் மொலி உதயனுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் தெரிவித்து இருந்தார். தமிழ் சமூகம் சட்டம் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டவர்கள் எனத் தெரிவித்த அவ்வதிகாரி மிகச்சிறு பிரிவினரே இக்குற்றச்செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவித்தார். தமிழ் சமூகத்தின் ஒத்துழைப்பு இன்றி இந்நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொண்டிருக்க முடியாது எனக்கூறினார். தமிழ் மக்கள் மத்தியில் பொலிசார் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் தாங்கள் ஈடுபட்டு உள்ளதாகவும் அவ்வதிகாரி உதயனுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

கைதும் கைப்பற்றப்பட்டவையும் :

கொள்ளை, பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தமை, பணமோசடி, போதைப்பொருள் குற்றங்கள் ஆகியவற்றுக்காக இவ்விளைஞர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். காலை 6 மணிக்கு ஈஸ்ற்காம் நோர்புளொக் வீதியில் உள்ள இரு வீடுகளின் முன் கதவுகளை உடைத்துக்கொண்டு 50 பொலிசார் உள்ளே புகுந்தனர். முதலாவது வீட்டில் யாரும் இருக்கவில்லை. மற்றைய வீட்டில் ஐவர் கைது செய்யப்பட்டனர். முதலாவது வீட்டைச் சோதனையிட்டதில் கிறடிட்காட்கள் மாட்டியது. ஐவர் கைது செய்யப்பட்ட வீட்டில் பல கிறடிட்காட்கள், கிறடிட்காட்டை வாசிக்கும் சாதனம், 3 புதிய கைக்கோடரிகள், பிக்கான் பிடிகள் என்பன கைப்பற்றப்பட்டது.


முற்றுகை நடந்துகொண்டிருக்கையில் முதலாவது வீட்டில் வசிக்கும் இளைஞர் அவ்விடத்துக்கு தனது காரில் வந்தபோது பொலிஸார் தெருவில் வைத்து அவரை கைது செய்தனர். இந்நபர் பொலிசாரின் தேடப்படும் பட்டியலில் காணப்பட்ட சசிதரன் ஶ்ரீராமமூர்த்தி (25) என்ற இளைஞர் ஆவர். இவரது Blue VW Passat, X reg காரும் பொலிசாரின் வேண்டப்பட்ட பட்டியலில் காணப்பட்டது. மேலும் ஒரு வாகனம் ஈஸ்ற்காமில் சோதனையிடப்பட்ட போது இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் போதைப் பொருள் காணப்பட்டது.


வோல்தம்ஸ்ரோவில் இடம்பெற்ற முற்றுகையில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து £6,000 பணம், £4,500க்கான காசோலை, £30,000 பெறுமதியான மெசடிஸ் பென்ஸ் ஆகியவை கைப்பற்றப்பட்டது. வோல்தம்ஸ்ரோ, ஈஸ்ற்காம் பகுதிகளில் முற்றுகைக்கு உள்ளான வீடுகளில் வசித்தவர்கள் இவ்விரு பகுதிகளுக்கும் இடையிலான குழு மோதலில் ஈடுபட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

முற்றுகையிடப்பட்ட ஏனைய பகுதிகளில் இருந்து மேலும் 16 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும் £17,000 பணம், £10,000 பெறுமதியான விலையுயர்ந்த பொருட்கள், கிறடிட்காட்கள், கொலை

**தமிழ் இளைஞர்கள் கைது**


# பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள்












ஆயுதங்கள், மாற்றப்பட்ட துப்பாக்கி என்பன கைப்பற்றப்பட்டது.

**Tamil Hotline :**

அதிகாலை முற்றுகையில் ஈடுபட்ட பொலிசார் அடுத்த கட்டமாக மக்களுக்கு நம்பிக்கையூட்டும் உறுதியளிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். மேற்படி 6 உள்ளாட்சிப் பிரிவுகளிலும் உள்ள தமிழ்க் கடைகள் மற்றும் நிறுவனங்களுக்குச் சென்ற பொலிசார் காலை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விளக்கமளித்தனர். மேலும் முக்கியமாக தாம் தற்போது அறிமுகப்படுத்திய Tamil Hotlineஇன் தொலைபேசி இலக்கத்தை அங்கிருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தினர். 0800 587 2935 என்ற அவ்விலக்கத்தையும் அதைப் பற்றிய விபரங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரத்தையும் பொலிசார் தமிழ் மக்களுக்குக் கொடுத்தனர்.

தமிழ் சமூகத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றிய விபரங்களைத் தெரிந்தவர்கள் 0800 587 2935 இலக்கத்துடன் தொடர்புகொண்டு தமிழிலோ, ஆங்கிலத்திலோ தகவல்களை வழங்கலாம். தகவல் கொடுப்பவர் தனது பெயர், விபரங்களை பொலிசாருக்கு வழங்க வேண்டியதில்லை. குற்றச்செயலில் ஈடுபட்டவரின் பெயர், முகவரி, தோற்றம், பயன்படுத்தும் வாகனம், நண்பர்கள், சந்தேகத்திற்கு இடமானவர்கள் போன்ற தகவல்களை பொலிசாருக்கு வழங்க முடியும்.

**ANPR Operation - Automatic Number Plate Recognition Operation :**

தமிழ் இளைஞர்களால் குற்றச்செயல்க்ளின் போது பயன்படுத்தப்பட்ட வாகனங்களை மடக்குவதற்கான நடவடிக்கை அதே நாள் மாலை இடம்பெற்றது. இதன் போதும் சிலர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பயன்படுத்திய வாகனங்களில் இருந்தும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது.

இந் நடவடிக்கையை கொமாண்டர் அல்பிரட் கிச்கொக் மேற்பார்வையிட்டார். ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கை மோசடி, வன்முறைகளில் ஈடுபட்டுள்ள சிலரும் குழுக்களும் சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்கும் தமிழ் சமூகத்தை பயமுறுத்தியும் சீண்டியும் வருகின்றனர் என்று குறிப்பிட்ட கிச்சொக் அப்படியானவர்களை குறிவைத்தே இந்த நடவடிக்கை எனக் குறிப்பிட்டு இருந்தார்.

(தொடர்ச்சி அ..பக்கம்)

## இளைஞர்கள் கைது.... (தொடர்ச்சி)

ஸ்கொட்லண்ட் யாட் தலைமையகத்தில் வைத்து உதயனுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை தமிழ் சமூகத்தின் அழைப்பையும் புலனாய்வில் பெறப்பட்ட தகவல்களையும் ஒருங்கிணைத்து மிக மோசமான வன்முறையிலும் மோசடியிலும் ஈடுபட்டவர்களைக் கைது செய்து குற்றங்களைப் பதிவு செய்ய வழிவகுத்துள்ளது எனக் குறிப்பிட்டு இந் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைப் பாராட்டினார். இந்நடவடிக்கையில் பொலிஸ் அதிகாரிகளுடன் குடிவரவு அதிகாரிகள், நிதி மோசடிப் பிரிவு அதிகாரிகள், கலாச்சாரப் பிரிவைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் அலுவலர் எனப் பலதரப்பினரும் ஈடுபடுத்தப்பட்டனர்.

தமிழ் சமூகத்தில் வளர்ந்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட 2வது பெரும் பொலிஸ் நடவடிக்கை இதுவாகும். முதலாவது நடவடிக்கை கடந்த ஆண்டு செப்ரம்பரில் நடைபெற்றது. அதன் போது 45 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு 23 பேர் மீது குற்றங்கள் பதிவு செய்யப்பட்டது. ஆரம்பகாலங்களில் கைது செய்யப்படுபவர்கள் பற்றிய போதிய தகவல்கள் இல்லாததால் கைது செய்யப்பட்டவர்கள் மீது குற்றங்களை பதிவு செய்ய இயலாதநிலை காணப்பட்டது. ஆனால் தற்போது பொலிசார் வன்முறை மற்றும் மோசடியில் ஈடுபடுபவர்கள் பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரித்து அதனடிப்படையிலேயே கைதுகளை மேற்கொள்வதால் குற்றவாளிகள் தப்பிக்க முடியாது என்றும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் பொரஸ்ட் கேட் அதிகாரி றோஜர் மொலி தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்கள் பெந்தல்கிறீன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

## ஒப்பிரேசன் என்வர் முடுக்கி விடப்பட்டு உள்ளது

தமிழ் இளைஞர்களிடையே உள்ள வன்முறையாளர்களைக் களையெடுக்கும் நடவடிக்கைகளை மெற்றோபொலிட்டன் பொலிசார் முடுக்கி விட்டு உள்ளனர். வன்முறை, கிறடிட்காட் மோசடி, களவு, கொலை இவற்றுடன் தொடர்பானவர்களை கைது செய்வதற்காகவே இந்நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டு உள்ளது. மூன்றாம் கட்டமாக யூலை 12ல் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒப்பிரேசன் என்வர் செப்ரம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

சந்தேக நபர்கள் தங்கி இருக்கும் வீடுகள், கிறடிட்காட் மோசடி நடைபெறும் வியாபார நிறுவனங்கள் குறிப்பாகப் பெற்றோல் நிலையங்கள் என்பன பொலிசாரின் முற்றுகைக்கு உள்ளாகி வருகின்றது. மேலும் வாகனங்களின் இலக்கத் தகட்டை வாசித்து பதிவு செய்யும் கருவியின் உதவியுடன் களவாடப்பட்ட வாகனங்களையும் குற்றச்செயல்களில் ஈடுபடுத்தப்பட்ட வாகனங்களையும் பொலிசார் இலகுவாக அறிந்து அவற்றைக் கைப்பற்றுவதுடன் அதில் பயணம் செய்தவர்களை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்துகின்றனர்.

## ஆட்கடத்தலில் ஈடுபட்ட இரு தமிழர்கள் கைது

பிரித்தானியாவுக்கு ஆட்கடத்தலில் ஈடுபட்டதற்காக ரூற்றிங்கைச் சேர்ந்த இரு தமிழர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். யூன் 16ல் கைது செய்யப்பட்ட இவர்கள் மீது யூன் 17ல் சட்டவிரோதமாக ஆட்கடத்த உதவியதாக குற்றம் பதிவு செய்யப்பட்டது. இவர்களுடன் சிப்பாவே நட்டவர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். லிங்ஸ் றோட்டைச் சேர்ந்த ஆறுமுகம் கனகேஸ்வரன் (53), கேட்சைட் றோட்டைச் சேர்ந்த பொன்னுத்துரை புவனேந்திரன் (49) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்ட தமிழர்கள் ஆவர். இவர்கள் யூன் 18 அன்று சட்டன் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

## ஈழப் போரட்டம் : ஐரோப்பியப் பதிவு

ஈழப் போராட்டம் பற்றிய ஆதாரபூர்வமான ஆவணப்படுத்தல்கள் எதுவும் இல்லாததால் அதனை ஆவணப்படுத்துவதற்கான முயற்சி பரிசில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பிரான்சில் இயங்கிவரும் சமூக அசைவிற்கான எழுத்தியக்கம் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில் தனிநபர்களின் வரலாற்றுப் பாத்திரத்தையும் பங்களிப்பையும், ஈடுபடதலையும் பதிவு செய்ய முன்வந்துள்ளது. இதன் மூலம் புனைவுகளில் இருந்து நேர்மையான நம்பகத்தன்மை கொண்ட ஆவணப்படுத்தல் ஒன்றை மேற்கொள்ள முடியும் என இவ்வியக்கத்தின் முன்னோடி உறுப்பினர் க யோகன் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் ஏதோ ஒரு வகையில் தம்மை இணைத்துக் கொண்ட அனைவரினதும் ஒத்துழைப்பை சமூக அசைவிற்கான எழுத்தியக்கம் கேட்டுள்ளது. சமூக அக்கறையாளர்களுக்கு என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிவித்தலில் புனைவுகளில் இருந்து வரலாற்றை மீட்க துணை செய்யுமாறு அவ்வியக்கத்தினர் அழைப்புவிடுத்துள்ளனர்.

## வயிற்றில் அடி

யூலை மாதம் 4ம் திகதி இல்பேர்ட் அருகாமையில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்று வழமைக்கு மாறாக மாலை 2 மணிக்கே ஆரம்பிக்கப்படுவதாக விளம்பரம் செய்யப்பட்டது. தாம் ஏதோ புதுமையாக சிந்தித்து புது மாதிரியாக இந்நிகழ்ச்சியை நடத்துவதாக கதை விட்டிருக்கிறார்கள். அனைவரும் வந்தவுடன் சாப்பாடு சாப்பாடு என்று சாப்பாட்டை மையப்படுத்தி விளம்பரம் செய்யப்பட்டது. இவ்வாறு இடம்பெற்ற விழாவில் அங்கு புதுமையும் இல்லை, ஒரு புதிரும் இல்லை. அன்று Europian Foot Ball Final Match என்பதாலேயே இந்நிகழ்ச்சி 2 மணிக்குத் தொடங்கப்பட்டதாக உள்ளிருந்து கிடைத்த செய்தி அறியத்தருகின்றது. அது ஒருபுறம் இருக்க Hall Care taker மண்டபத்திற்கு வந்து சேர 3 மணியாகி விட்டதாம். நேரத்திற்கு வந்த ஒருவர் ஒரு மணி நேரம் வெளியில் காத்திருந்தாராம். இதில் அவர் வேட்டி சால்வை வேறு. என்ன இருந்தாலும் Hall Care Taker மனுசனின் வயிற்றில் அடித்தது பிழை தான்.

## பிரித்தானியத் தீவில் நெடுந்தீவின் உறவுப் பாலம்

இங்கிலாந்து வாழ் நெடுந்தீவு மக்கள் யூன் 27ம் திகதியன்று நெடுந்தீவு ஒன்றியத்தினரின் அழைப்பின் பேரில் வெம்பிளியில் ஒன்று கூடினர். யாழ்ப்பாணத்தின் வடமேற்கே சப்த தீவுகளில் ஒன்றாய் பல சரித்திரச் சான்றுகளுடன் அமைந்துள்ள தீவுகளில் மிக முக்கியமான தீவு நெடுந்தீவு என்பது குறிப்பிடத்தக்கது. வைத்திய கலாநிதி ஈ கே சந்திரபால் மற்றும் தமிழ்க்கங்கை செவாலியர் புலவர் அமுது ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். அங்கு நெடுந்தீவு சுரேஸ் தொகுத்து வெளியிட்ட அரிய சரித்திரச் சான்றுகள் உள்ளடங்கிய புகைப்படங்களுடன் கூடிய கலங்கரை விளக்கம் எனும் நூல் எல்லோருக்கும் விநியோகிக்கப்பட்டது.

புதிய நிர்வாகம் பொறுப்பேற்பதற்கு முன் விழாவை சட்டத்தரணி க வெற்றிவேல் தலைமையேற்று நடத்தினார். புதிய நிர்வாகக்குழு சபையோரால் தெரிவு செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்டவர்கள் முறையே தலைவர் சு மகாலிங்கசிவம், செயலாளர் சி குலசபாநாதன், உப தலைவர் செ சுரேஸ், உப செயலாளர் ஏ வேணுகோபால், பொருளாளர் இலட்சுமிகாந்தன், உப பொருளாளர் குலேந்திரன் ஆகியோருடன் 9 பேர் கொண்ட உப குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

தலைமை சு மகாலிங்கசிவம் நெடுந்தீவின் போக்குவரத்துப் பிரச்சனை பற்றியும் அதற்காக ஒரு மோட்டார் படகொன்றை அந்த மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார். செயலாளர் சி குலசபாநாதன் தீவகத்தின் தேவைகளையும் அதை எம்மால் எப்படி தீர்த்து வைக்கலாம் என்பதையும் அனைவருக்கும் விளக்கிக் கூறினார்.
சட்டத்தரணி க வெற்றிவேல் அவர்கள் நெடுந்தீவின் பொருளாதார மேம்பாடு எனும் தலைப்பில் தென்னிந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட இருக்கும் சர்ச்சைக்குரிய சேது சமுத்திர திட்டத்தை நெடுந்தீவின் வளர்ச்சிக்கு எப்படி பயன்படுத்தலாம் என விளக்கிக் கூறியதுடன் தீவகத்தின் கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கு நாம் எப்படி உதவலாம் என்று தனது கருத்தை முன் வைத்தார். புலவர் அமுது ஒன்றியம் வாழ வாழ்த்திவிட்டு தனது இளமைக்காலத்தை சுவைபட விளக்கிக் கூறினார்.

அதன்பின் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளால் அரங்கம் களை கட்டியது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் ஏ வேணுகோபால் செயற்பட்டார். குலசபாநாதன் தலைமையில் நடைபெற்ற காரியம் யாவிலும் கைகொடுப்போம் எனும் கவியரங்கத்தின் பின் பேசிய சுரேஸ் தமது ஒன்றியத்தின் கணக்கெடுப்பின் படி நூற்றுக்கணக்கான நெடுந்தீவைச் சேர்ந்த குடும்பத்தினர் இங்கிலாந்தில் வாழ்வதாகவும் இவர்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து இங்குள்ள தமது வருங்கால சந்ததியினரது நன்மைக்காகவும் நெடுந்தீவில் உள்ள மக்களுக்காகவும் ஒன்றியம் பணிபுரியும் என்று கூறினார். வசந்தனின் நன்றியுரையைத் தொடர்ந்து இறுதியாக சுவையான




## வோல்தம்ஸ்ரோவில் விளையாட்டு விழா



சங்கத் தலைவர் ரவீந்திரமோகன்

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் வோல்தம்ஸ்ரோ தமிழ்ச் சங்கமும் கூட்டாக இணைந்து ஓகஸ்ற் மாதம் 1ம் திகதி வோல்தம்ஸ்ரோ பூல் அன் ரறக் மைதானத்தில் விளையாட்டு விழாவொன்றை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர். காலை 11 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விளையாட்டு விழாவில் வோல்தம்ஸ்ரோ தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார். வோல்தம்ஸ்ரோ தமிழ்ப் பாடசாலையின் அதிபர் குகச்சந்திரன் முக்கிய இணைப்பாளராக செயற்படுகிறார்.

ஊரில் உள்ள பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஒன்று லண்டனில் உள்ள தமிழ்ப் பாடசாலையுடன் இணைந்து விளையாட்டு விழாவை நடாத்துவது ஒரு புதிய முயற்சியென மாணவர் சங்கத்தின் தலைவர் ரவீந்திரமோகன் தெரிவித்தார். இவ்விளையாட்டு விழாவை பல சமூக அமைப்புகளில் உறுப்பினராக உள்ள மூர்த்தி முன்னின்று ஒழுங்கு செய்கிறார். இந்நிகழ்ச்சி மூலம் சேகரிக்கப்படும் பணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் வோல்தம்ஸ்ரோ தமிழ்ச் சங்கத்திற்கும் பயன்படுத்தப்படும் என ரவீந்திரமோகன் அறிவித்துள்ளார்.

மேலும் பொங்கும் பொழுது 2004 நிகழ்ச்சி மூலமாக £1435 சேகரிக்கப்பட்டுள்ளது. விளம்பரம், உணவு விற்பனை, அதிஸ்ரலாபச் சீட்டு, நன்கொடை மூலம் £3708ம் ரிக்கற் விற்பனை மூலம் £2590ம் ஆக மொத்தம் £6300 வரவாகி உள்ளது. மண்டபம் £1200, நிகழ்ச்சி, ஒலி, ஒளி £1235, உணவு £1155, பிறின்ரிங் £1040, இதர செலவுகள் £230 என மொத்தச் செலவு £4860 செலவு போக மிதமானது £1435 எனத் தெரிவித்த ரவீந்திரமோகன் இலண்டனில் இயங்கி வருகின்ற பொதுச் சங்கங்கள் பணத்தைச் சேர்க்கும் போது காட்டும் அக்கறையை பின்னர் கணக்கு வழக்குகளை வெளிப்படுத்துவதில் காட்டுவதில்லை என்ற பரவலான குற்றச்சாட்டை தவிர்ப்பதற்காகவே தாம் கணக்கு வழக்கை வெளியிடுவதாகக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் வருடத்தில் 3 அல்லது 4 நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக நடத்தி, கல்லூரியில் ஒரு தொடர்ச்சியான வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க முயற்சி எடுத்து வருவதாகக் குறிப்பிட்டார்.

VACANCY - Chef & Waiter
For Srilankan/South Indian Restaurant
புதிய ரெஸ்ரோறன்ட் ஒன்றுக்கு
சமயல் தேவைக்கும் பரிமாறல்
தேவைக்கும் அனுபமிக்க
வேலையாட்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
Navam (T) 020 8861 5614
020 8904 3489

London School of Management & Technology
Overseas Students & Visitors Welcome
- Full time courses
- BSc Computer Science
- MSc. Computer Science
- BBA, MBA, LLB, LLM, PhD
- Diploma in Computer Science
- Diploma in Business Administration

Free visa application assistance provided
1 The Broadway, Hanwell, London W7 3SS
Tel: 02088401177 Fax: 02088409911
E.mail: admin@wlsmt.org.uk
Website:www.wlsmt.org.uk

YAASHIK Motors
* MOT - Diesel & Petrol
* Performance Tuning & Parts
* Mail Order
* Seat, Audi Specialist
* Servicing, Clutches, etc.
Tel: 020 8998 8900
Unit 5A, 255 Water Road, Wembley, Middx. HA0 1JW

JK SHAH
Chartered Certified Accountants
& Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

MORTGAGE PLUS (London) LTD
Mortgages Tailor-made for You
* Specialist in CCJ/Default Cases
Tel:
020 8571 2570
07710 150713
81, South Road, Southall, Middx.
Your home is at risk if you fail to keep up repayments on loans secured on it.

# கருகிய மொட்டுக்கள் : தமிழ் நாட்டின் கறுப்பு வெள்ளி

யூலை 16 தமிழ் நாட்டின் மிகத் துயரமான நாள். 90 இளம்மொட்டுக்கள் தீயில் இருந்து தப்பிக்க முடியாமல் வெந்து கருகிய நாள். கும்பகோணத்தில் உள்ள தாராசுரம் பகுதியில் உள்ள Lord Kirishna ஆங்கில மொழிப் பாடசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 90 சிறார்கள் தீயில் வெந்து மாண்டனர். 200க்கும் மேற்பட்டவர்கள் தீக்காயங்களுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். பள்ளியின் சமையற் பகுதியில் ஏற்பட்ட தீ மிக வேகமாகப் பரவி பாடசாலையின் கூரையில் பற்றி இக்கொடிய விபத்தை ஏற்படுத்தியது. இவ்விபத்தை அடுத்து பாடசாலையின் அதிபர் புலவர் பழனிச்சாமி உட்பட ஐவர் கைது செய்யப்பட்டனர்.

**Lord Kirishna பாடசாலை :**

Lord Kirishna பாடசாலை உயர்நிலை, நடுநிலை, 1 - 5 ம் வகுப்பு வரையான பாலர் பிரிவுகளைக் கொண்டிருந்தது. அங்கு 900 மாணவர்கள் கற்கின்றனர். இது அரச உதவி பெற்று இயங்கும் தனியார் பாடசாலையாகும். பாடசாலையின் 3 அடுக்குத் தொகுதியில் கிழே உயர்நிலைப் பிரிவும், முதல் மாடியில் நடுநிலைப் பிரிவும், மேலே பாலர் பிரிவும் செயற்பட்டு வந்தது. கூரை, சமையல் பிரிவு என்பன தென்னோலையால் வேயப்பட்டு இருந்தது. இப்பாசாலைக்கு ஒடுக்கமான ஒரே ஒரு பாதையே வழியாக இருந்தது. படித் தொகுதியும் ஒடுக்கமானதாகவே இருந்தது.

**தீக்கிரையான பாலர் வகுப்பு :**

மதிய உணவு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஏற்பட்ட தீ தென்னோலையால் வேயப்பட்ட பகுதிகளைத் தாக்கியது. பாலர் வகுப்பின் கூரையிலும் தீ பற்றியது. ஒடுக்கமான படி வழியாக தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சிறார்கள் போராடினர். கதறினர். கூரை எரிந்து அம்மாணவர்கள் மீது வீழ்ந்தது. அது அவர்களது போராட்டத்தை இன்னமும் கடுமையாக்கியது. போராட்டம் பலனளிக்கவில்லை. அப்பச்சிளம் பாலகர்கள் தீயில் வெந்தனர். அவர்களது உணவுப் பெட்டிகளும், பைகளும் சிதறிக் கிடக்கின்றன. கரும்பலகையில் கற்பிக்கப்பட்ட Separation என்ற பதம் அப்படியே இருந்தது.



தீயில் கருகிய மொட்டுக்கள்



பாதிக்கப்பட்ட பாலர் வகுப்பறை



சோனியாகாந்தி பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிடும்போது

**யாருடைய தவறு :**

மாணவர்கள் வகுப்பில் இருந்து வெளியேறுவதைத் தடுக்க பள்ளியின் பிரதான நுழைவாயில் எப்போதும் மூடப்பட்டே இருக்கும். இதனால் உடனடியாக மாணவர்கள் வெளியேற முடியவில்லை. படித் தொகுதி மிகவும் ஒடுக்கமாக இருந்தால் அவ்வளவு தொகையான மாணவர்களும் விரைவில் வெளியேற முடியவில்லை. மேலும் தீயணைப்புப் படையினரின் காப்பாற்றும் முயற்சிக்கு இவ்வொடுக்கமான பாதை உதவவில்லை. ஆரம்பத்தில் பாலர் பிரிவில் இருந்த மாணவர்களை அமைதியாக அவர்களின் இடங்களிலேயே அமரும் படி ஆசிரியர்கள் கூறி இருப்பதாக சில பத்திரிகைகள் குற்றம்சாட்டி உள்ளன. இது இவ்வளவு அதிகமானோர் பாதிக்கப்படுவதற்கு வழிகோலி உள்ளது. மேலும் இச்சிறார்களை கைவிட்டு விட்டு சில ஆசிரியர்கள் வெளியேறியதாகவும் அப்பத்திரிகைகள் குற்றம்சாட்டி உள்ளன.

மிக முக்கியமாக ஓலைக் கூரைகள் சட்டவிரோதமானவை என கட்டிடச் சட்டம் தெரிவிக்கிறது. அப்படி இருக்கையில் பாலர் வகுப்புக் கூரை தென்னோலையால் வேயப்பட்டதும் தென்னோலையால் வேயப்பட்ட சமையலறை அதற்கு அருகில் இருந்ததும் விபத்துக்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. மேலும் பாடசாலைகளில் எந்த ஒரு தீயணைப்பு உபகரணங்களும் பயன்படுத்தும் நிலையில் இல்லை என்ற குற்றச்சாட்டும் வெளியிடப்பட்டு உள்ளது. மேலும் இரு ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஒவ்வொரு பாடசாலையின் கட்டிடமும் பரிசோதனைக்கு உட்பட்டு பாடசாலை நடத்துவதற்கு உகந்தது என்று சான்றிதழ் வழங்கப்பட்டாலே அவை இயங்க அனுமதிக்கப்படும். இவ்வாறான பரிசோதனை இப்பாடசாலையில் 3 ஆண்டுகளுக்கு முன்னரேயே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவந்து உள்ளது.

தமிழ் நாட்டில் உள்ள 50,000 வரையான பாடசாலைகள் நடைமுறையில் உள்ள பாதுகாப்பு விதிகளையும் ஒழுங்குகளையும் மீறிவருவதாகவும் அவற்றில் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள 13,000 பாடசாலைகள் தனியார் பாடசாலைககள் எனவும் தெரிய வந்துள்ளது. தமிழ் நாடு பாண்டிச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த பாடசாலைகள் 19 யூலை திங்களன்று பூட்டப்பட்டிருந்தன. இத்தீ விபத்துத் தொடர்பாக விசாரணைகளை நடாத்த ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் நான்கு மாதங்களில் தனது அறிக்கையை தமிழ்நாடு முதல்வருக்குக் கையளிப்பார்.

**UDHAYAN NEWS HOTLINE**
**0208 9525677**

**David Shine & Kharbanda Solicitors**
Divorce, Litigation,
Wills, Probate
CONVEYANCING
MATRIMONIAL & FAMILY
*Also Landlord & Tenant cases*
*See us Now*
**020 8571 6001/2**
8a South Rd Southall

**Employment & Family Solicitors**
Rengan N Devarajan
1st Floor, 128 Ilford Lane
Ilford, Essex IG1 2LE
**02084785797**
07734 761 448

**SRIHARANS SOLICITORS**
AUTHORISED TO ADMINISTER OATH
Professional service for freedom and justice under the Human Rights Act of UK and with European Convention of Human Rights
(P) 020 8843 9977
020 8843 9974 (3 lines)
223 The Broadway
Southall, Middx.

**IN TROUBLE WITH THE POLICE**
24 Hr. POLICE STATION ATTENDANCE
FREE INITIAL INTERVIEW
ANY CASE CONSIDERED
**Mehra & Co.**
Solicitors
Criminal Defence Service
367 High Road Wembley
**020 8902 1900**
Mobile 07956 528 927
07956 463 665

**To Know your Birth Star contact 020 8905 7775, 020 8952 5677**

**RASIAH & CO.**
**Solicitors**
* Conveyancing (Residential & Commercial)
* Immigration
* Matrimonial
* Landlord & Tenants
* Police Station Representation
* Legal Aid work undertaken
**020 8543 4040**
**020 8543 2400**
180A Merton High Street, London SW19 1AY

பிறந்தநாள் மற்றும் சிறு விளம்பரங்களுக்கு
020 8952 5677

**EMPLOYMENT CLAIMS**
**NO WIN NO FEE**
We act for Employers and Employees on NO WIN NO FEE basis the following matters
Unfair Dismissal, Racial Discrimination, Sexual Discrimination, Denial of Promotion, Underpayment, Denial of Holiday pay/sick pay/ maternity leave/minimum pay and related issues
**Contact Mr. Das on 0790323597/07958618106**
**MARKANDAN & Co.**
Thamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
email: mm@markandan-solicitors.co.uk

**Graphical Impact**
*Signs ~ Designs ~ Graphics*
www.graphicalimpact.com
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332

**K.Ravi Solicitors**
Solicitors & Administrators of Oaths
* Immigration
* Conveyancing Both Residential & Commercial
* Welfare Matters
* Civil Litigation
* Landlord & Tenant Disputes
Call **020 8866 7800**
Suite 2, First Floor (above Abbey National), 410-420 Rayners Lane, Pinner, Middx. HA5 5DY



**New Century Glazing Ltd.**
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
*Member of FENSA* Free Estimates
**Tel: 020 8848 0189**
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

**Thompson & Co.**
**Solicitors**
Legal Aid for
* Immigration
* Employment
* Criminal Law
* Also Property & Family Law
**Tel: 020 8767 5005**
48A Tooting High Street
(Opposite Broadway Station)
London SW17 0RG
Email: mail@thompsonlaw.co.uk

## நாடு திரும்புபவர்களுக்கு உதவி :

யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியேற்ற, அவுஸ்திரேலியா 10 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகளை மீளக் குடியேற்றுவது, அவர்களுக்கு தச்சுவேலை, மேசன் வேலை, தையல் போன்ற சுயதொழில்களை ஏற்படுத்திக் கொடுக்க இந்நிதி பயன்படுத்தப்பட உள்ளது. ஐ.நா அபிவிருத்தி திட்டத்தினால் வழங்கப்படும் 1 மில்லியன் டொலர்கள் மீன்பிடித் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு வழங்கப்பட இருக்கிறது. மேலும் மாணவர்களுக்கு வெடி பொருட்கள் மற்றும் கண்ணிவெடிகள் பற்றிய விழிப்புணர்வுப் பயிற்சிக்கும் பாடசாலைக் கல்வியை தவறவிட்ட மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் நடத்தவும் யுனிசெப்பினால் வழங்கப்பட்ட 6 மில்லியன் டொலர்கள் பயன்படுத்தப்பட உள்ளது.

## மீளக் குடியமர்வுக்கு உதவி :

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மூன்று இலட்சம் குடும்பங்களை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த 2,400 மில்லியன் ரூபாய் தேவையென மதிப்பிடப்பட்டு உள்ளது. இதில் 1,400 மில்லியன் ரூபாவை நிகொட் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளது. 800 மில்லியன் ரூபாவை ஐரோப்பிய ஒன்றியம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. மீதமாகவுள்ள 200 மில்லியன் ரூபாவை உதவி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள அமைச்சின் செயலாளர் ஜயசிங்க முயற்சிகளை மேற்கொள்கிறார். இந்நிதி ஒன்று சேர்க்கப்பட்ட உதவித்திட்டம் (யூ.ஏ.எஸ்.) என்ற செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீளக் குடியமருபவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

## மாவீரர் கொடுப்பனவு

மாவீரர்களின் பெற்றோருக்கு தேசியத் தலைவர் நிதியத்திலிருந்து மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்டு வருகிறது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாவீரர்களின் பெற்றோருக்கான கொடுப்பனவு வைபவம் யூன் நடுப்பகுதியில் வாகரையில் நடைபெற்றது. மாவீரர் கொடுப்பனவு கிடைக்கப் பெறாத பெற்றோர் மாவீரர் காப்பக பொறுப்பாளர் ஐங்கரனுடன் தொடர்பு கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் தெரிவித்து உள்ளனர்.

## சுதந்திர வர்த்தகம் :

இலங்கை - அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்து ஆராயப்பட்டு வருகிறது. வர்த்தக நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இதனை மேற்கொண்டு உள்ளார். குறிப்பாக அமெரிக்காவின் எதிர்பார்ப்புகள் சிலவற்றை இலங்கை பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. யூன் நடுப்பகுதியில் அமெரிக்கா சென்ற ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே குழு இது பற்றிய பேச்சுவார்த்தையை நடத்தி உள்ளது. இவ்வர்த்தக உடன்படிக்கையின் மூலம் ஆடை உற்பத்தி உட்பட இலங்கையின் ஏனைய உற்பத்திகளுக்கு நிலையான சந்தையை அமெரிக்காவில் ஏற்படுத்த முடியும் என இலங்கைத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

## கண்ணிவெடி அகற்றல் :

2006ல் வடக்கு, கிழக்கை கண்ணிவெடிகளற்ற பகுதிகளாக்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக தேசிய கண்ணிவெடி அகற்றும் குழுவின் செயலாளர் குணசிங்கம் தெரிவித்துள்ளார். அமெரிக்கப் படையினர் கண்ணிவெடி அகற்றுவது குறித்து 600 இலங்கையர்களுக்கு பயிற்சியளித்து வருகின்றனர். இப்பயிற்சி வரும் ஒகஸ்ட் மாதம் முடிவடையும். யு.என்.டி.பி, யு.என்.எச்.சி.ஆர் நிறுவனங்களின் உதவியுடன் இக் கண்ணிவெடி அகற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. யாழ் குடாநாட்டிலிருந்து 5 இலட்சம் கண்ணிவெடிகளும் வன்னிப் பகுதியிலிருந்து 10 இலட்சம் கண்ணிவெடிகளும் இதுவரை அகற்றப்பட்டுள்ளன.

## மதமாற்றுத் தடைச் சட்டம் :

புத்தசாசன அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சமர்ப்பித்த மதமாற்றுத் தடைச்சட்ட நகலை ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளனர். அக்கட்சியின் பேச்சாளர் யூன் 18ல் இத்தகவலை வெளியிட்டார். குறிப்பாக கிறிஸ்தவ மதத்திற்கு எதிராகவே இச்சட்டம் கொண்டு வரப்படுகிறது. இம்மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் ஏற்கனவே தனது ஆதரவை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மதமாற்றுத் தடைச் சட்டத்தால் ஈர்க்கப்பட்ட மகேஸ்வரன் அதனை இலங்கையிலும் அமுல்படுத்த வேண்டும் என்று இந்து கலாச்சார அமைச்சராக இருந்த போது குறிப்பிட்டார். ஜாதிக ஹெல உறுமய மதமாற்றத்துக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டு உள்ளது.

## தனிமனித உரிமை

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் பலாத்கார மதமாற்றம் நிகழ்ந்ததில்லை. பௌத்த, இந்து மதங்களினால் கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மக்களே கிறிஸ்தவ மதத்துக்கு மாறி வருகின்றனர். தமது மதங்களை புனரமைக்க முடியாத தேசியவாத சக்திகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி தமது மதம் சம்பந்தமாக உள்ள தனி மனித உரிமையை பறிக்க முயல்கின்றன. மதத்தின் பெயரில் வாக்கு வங்கிகளை நிரப்ப அரசியல் கட்சிகளும் இந்த மதவாத சக்திகளுடன் கைகோர்த்துள்ளன. இலங்கையில் மத மாற்றத் தடைச்சட்டம் என்பது சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான ஒடுக்கு முறையாக மாறலாம் என மத சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள் அஞ்சுகின்றனர்.

## 15 பெண்கள் மூழ்கினர் :

யூன் 12ல் தமிழ் நாட்டிலுள்ள மண்டபம் அகதிகள் முகாமிலிருந்து மன்னாரை நோக்கி பயணம் செய்த படகு நீரில் மூழ்கியது. அதில் பயணம் செய்த 15 பெண்களும் நீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. படகோட்டிகள் இருவரும் தப்பியுள்ளனர். இலங்கை வந்து வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெறுவதற்காகவே ஆபத்துக்கள் நிறைந்த கடற்பயணத்தில் இப்பெண்கள் ஈடுபட்டதாகத் தெரிகிறது. இதேவேளை இலங்கை திரும்ப முயன்ற 27 இலங்கைத் தமிழ் அகதிகள் பொலிசாரினால் இராமேஸ்வரம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாதுகாப்பு ஒப்பந்தம்

இலங்கை அமெரிக்க அரசுகள் செய்துகொண்ட இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கரேஜஸ் என்ற கப்பல் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டது. இக்கப்பலைக் கையளிக்கும் வைபவம் வாஷிங்ரன் பாதுகாப்புச் செயலகத்தில் யூன் 25ல் நடைபெற்றது. அமெரிக்கக் கடற்கரையோரப் பாதுகாப்புப் பிரிவின் தளபதி வைஸ் அட்மிரல் தோமஸ் கொலின் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியிடம் கப்பலை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். இந்தக் கப்பல் அமெரிக்கக் கரையோரப் பாதுகாப்பில் முன்னர் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 210 அடி நீளமான இந்தக் கப்பலில் 70 பேர் பணியாற்ற முடியும். அத்துடன், இரண்டு உலங்குவானூர்திகளை நிறுத்திவைக்கக் கூடிய தளமும் இதில் உள்ளது.

## சிங்கப்பூர் - இலங்கை : உறவும் வர்த்தகமும்

வன்செயல் இடம்பெறும் நாடாக காணப்பட்ட இலங்கையில் துப்பாக்கிகள் ஓய்வடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைவதாக சிங்கப்பூர் பிரதமர் கோ சொக் டொங் தெரிவித்து உள்ளார். யூன் 25ல் இலங்கைக்கு விஜயம் செய்த அவர் மேலும் குறிப்பிடுகையில் நல்லிணக்கம், சமாதானம், ஸ்திரத் தன்மை என்பன பொருளாதார மீட்சி பெற மிகவும் அவசியமானவை என்றும் இவை இல்லாமல் இலங்கை வளர்ச்சி காண முடியாதென்றும் தெரிவித்தார்.

சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஆர்வமாக உள்ளனர். சிங்கப்பூர் முதலீட்டாளரின் ஒத்துழைப்புடன் இலங்கையில் செரண்டிப் பார்க் எனும் வர்த்தகத் தொகுதியொன்று உருவாக்கப்படவுள்ளது.

மேலும் மிக விரைவில் இலங்கையும் சிங்கப்பூரும் பொருளாதாரப் பங்கு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளவுள்ளன. இவ்வுடன்படிக்கை மூலம் தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் சிறப்பான வர்த்தக உறவு பேணப்படும் என்று நம்பப்படுகிறது. இலங்கையின் அழகிய கடற்கரைகளும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பௌத்த விகாரைகளும் சிங்கப்பூர் மக்களைக் கவர்ந்து இலங்கையின் உல்லாசத்துறை வருவாயை மேலும் அதிகரிக்கும் என இலங்கை அரசு நம்புகிறது.

சிங்கப்பூர் குழுவினருக்கு விருந்தளித்த பிரதமர் சந்திரிகா குமாரதுங்க சிங்கப்பூரும், இலங்கையும் பிரித்தானியாவின் காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த நாடுகள் என்றும் மலாயா சம்மேளனத்தின் ஒரு பகுதியாக சிங்கப்பூர் இருந்தது என்றும் விருந்துபசார உரையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் அந்தக் காலகட்டத்தில் பெரும் எண்ணிக்கையான இலங்கை ஆசிரியர்கள், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள் மற்றும் ஏனைய தொழில்துறை சார்ந்தவர்கள் சிங்கப்பூர் தீவிற்கு சென்று குடியேறி தங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக பல வழிகளிலும் பங்களிப்பைச் செலுத்தியுள்ளனர். உங்கள் நாட்டவர் பலரின் 2 ஆம், 3 ஆம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர்கள். சுதந்திர சிங்கப்பூரின் முதலாவது வெளி விவகார அமைச்சரான சின்னத்தம்பி இராசரத்தினம் இலங்கை வம்சாவளியினராவார். இவை இரு நாட்டு மக்களினதும் நட்புறவு நீடிப்பதற்கு இறுக்கமான பிணைப்பாக இருக்கின்றன எனத் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் தலைவர் இலங்கை விஜயம்

ஜூலை 31 இல் பாகிஸ்தான் ஆட்சித் தலைவர் பெர்சவா முஷ்ரப் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறார். அப்போது இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட இருக்கிறது. இலங்கையும், இந்தியாவும் 1998 டிசம்பரில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

## சிங்களப் பொலிசாருக்கு தமிழ்மொழிப் பயிற்சி

அகதிகளுக்கான ஐ.நா.தூதரக ஏற்பாட்டில் சிங்களப் பொலீஸாருக்கு விசேட தமிழ்மொழிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. மானிப்பாய், ஊர்காவற்றுறை,

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

## முன் பக்கத் தொடர்ச்சி...

கொடிகாமம், வட்டுக்கோட்டை, சுண்ணாகம், இளவாலை ஆகிய 6 பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 240 பொலிசார் இத்தமிழ்மொழிப் பயிற்சியைப் பெற்று வருகின்றனர். தமிழ் பகுதிகளில் சேவையில் உள்ள சிங்களப் பொலீஸார் உள்ளூர்த் தமிழ் மக்களிடம் சிறந்த நிர்வாக வேலைகளை மேற்கொண்டு அன்றாடப் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்க இம்மொழிப் பயிற்சிகள் உதவும் என பயிற்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்பயிற்சிகளில் இணைந்துள்ள பொலீஸாருக்குத் தமிழ் - சிங்கள மொழி நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. யூனில் யாழ்ப்பாணம், கோப்பாய்ப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 40 பொலிசார் 6 மாத பயிற்சி முடித்து சான்றிதழ் பெற்று வெளியேறியுள்ளனர்.

# ராஜீவ் கொலைக் கைதி நளினியின் மகள் தாயைச் சந்திப்பதில் இழுபறி

இலங்கையில் உள்ள முருகன் - நளினி தம்பதிகளின் மகள் அறிவொளி இந்தியா செல்ல விசா வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு உள்ளது. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளான தனது பெற்றோரைச் சந்திப்பதற்காக அறிவொளி இந்தியத் தூதரகத்தில் விசா கோரி விண்ணப்பம் செய்திருந்தார். அவரது விசா தொடர்பாக இறுதி முடிவெடுக்க அவரது விண்ணப்பப் படிவம் புதுடில்லியிலுள்ள இந்திய வெளிநாட்டமைச்சிற்கு அனுப்பப்பட்டு உள்ளது.

நளினி 1992ல் கைது செய்யப்படும் போது, 4 மாத கர்ப்பிணியாய் இருந்தார். அதன் பின் சிறையில் பிறந்த அறிவொளி இரண்டு வயது வரை தாயுடன் சிறையிலேயே வளர்ந்தார். பின் 4 வருடங்கள் வரை தாயின் சகோதரியுடன் வளர்ந்த அறிவொளி 6 வயதில் இலங்கைக்கு வந்து தனது தந்தை முருகனின் பெற்றோருடன் வசித்து வருகிறார். தற்போது யாழ்ப்பாணத்தில் 7 ஆம் வகுப்பில் கல்விகற்று வரும் அறிவொளி தனது பேத்தியாருடன் இந்தியா வருவதற்கே கடந்த ஏப்ரலில் விசா கோரி விண்ணப்பித்திருந்தார். ஆனால், அவருக்கு இதுவரை விசா வழங்கப்படவில்லை. அறிவொளியைப் பார்க்க விசா வழங்கும்படி நளினி இந்திய வெளிவிவகார அமைச்சிடமும் தேசிய மகளிர் ஆணைக்குழுவிடமும் விண்ணப்பித்து உள்ளார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் தமக்கு விடுதலை கிடைக்கும் என ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் நம்பினர். ஆனால் அது பற்றி எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகள் குற்றம்சாட்டப்பட்டு உள்ளதால் இக்கைதிகள் விடயத்தில் விடுதலைப் புலிகள் தம்மை மிகவும் தூரத்திலேயே நிறுத்தி உள்ளனர். 13 ஆண்டுகளுக்குப் பின் தற்போது இக்கைதிகள் பெரும்பாலும் அனைவராலும் மறக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வேலூர் மத்திய சிறையில் உள்ள மரண தண்டனை பெற்ற கைதிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் மற்றும் ஆயுள் சிறைத்தண்டனை பெற்ற கைதிகள் ரொபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோரையும், மகளிர் சிறையில் உள்ள முருகனின் மனைவி நளினியையும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் சந்தித்துள்ளார்.

I.C.E. World
Dealers of in car entertainment, Multimedia and Security Systems
SPECIAL OFFERS
12 Kenwood, Pioneer, JBL or Sony and Box NOW ONLY £79
Call (T) 020 8839 9166
(T) 01753 521 055
website: www.shop.com
489, Yeading Lane, Northolt, Middx. UB5 6LN
245, Farnham Road, Slough, Berkshire SL2 1DE

# நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது

உலகில் உள்ள நாடுகளில் யுத்த நிறுத்தம், ஒப்பந்தங்கள் ஏற்பட்டவுடன் முதலில் நிகழ்வது நல்லிணக்க அடிப்படையிலான கைதிகளின் விடுதலை ஆகும். இதுவே இதுவரை வழக்கமாக இருந்து வருகின்றது. ஆனால் இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்து சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகிய பின்னரும் கூட, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்தும் சிறை வைக்கப்பட்டு இருப்பது ஆச்சரியமாகவும் வேதனையாகவும் உள்ளது.

இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும் குறிப்பாக சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அப்பாவித் தமிழ் அகதிகள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. சிறப்புமுகாம் என்னும் பெயரில் இந்தியாவில் தமிழ்நாட்டில் பல வருடங்களாக இயங்கி வரும் சிறைகள் உடனடியாக மூடப்பட வேண்டும். அங்கு அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் உடனடியாக எவ்வித நிபந்தனைகளும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் கோரி வருகின்றன.

சிறப்புமுகாம்களில் பல வருடங்களாக அடைத்து வைக்கப்பட்டு பல்வேறு கொடுமைகளையும் அனுபவித்த சிலர் தற்போது இலண்டனில் வசிக்கிறார்கள். அவர்களில் சிலர் இங்கு தஞ்சம் நிராகரிக்கப்பட்டு நம்பிக்கையற்ற எதிர்காலத்துடன் வாழ்கின்றனர்.

KM
KUNDI MOTORS
"Your Local Garage Service"
• While U Wait Service Available • All Makes And Models Welcome
Specialists In Mercedes Benz & BMW
• Servicing • M.O.T. • Tyres • Exhausts • Batteries
• Full Diagnostic Equipment - Fault Finding • Body Work
10% DISCOUNT ON ALL MAJOR SERVICES
ALL WORK GUARANTEED
Unit 4c, 14-16 Wadsworth Road, Perivale, Greenford, Middx. UB6 7JD
(T) 020 8997 2340 (M) 07956 995 864
www.localbusinessdirectory.co.uk

# கனடா தேர்தலில் தமிழர்கள் (சிறுபான்மையினர்) செல்வாக்கு

கனடாவின் 34 ஆவது பாராளுமன்ற தேர்தல் யூன் 28ல் நடைபெற்றது. 308 ஆசனங்களுக்கான தேர்தலில் போல் மாட்டின் தலைமையிலான ஆளும் லிபரல் கட்சி 135 ஆசனங்களைப் பெற்று கூடிய ஆசனங்களைக் கொண்ட தனிப் பெரும் கட்.சியாக உள்ளது. நான்காவது தடவையும் ஆட்சியைத் தக்க வைத்துள்ள லிபிரல் கட்சி ஆட்சி அமைக்கக் கூடிய பெரும்பான்மையைப் பெறத் தவறிவிட்டது. புதிய ஜனநாயகக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து கூட்டாட்சி ஒன்றே உருவாக்கப்பட உள்ளது. இத்தேர்தலில் கொன்சவேர்ட்டிவ் கட்சி 93 ஆசனங்களையும், கியூபெக்குவா கட்சி 55 ஆசனங்களையும், புதிய ஜனநாயகக் கட்சி 24 ஆசனங்களையும், சுயேட்சைக் கட்சி 1 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன. பல்லினச் சமூகங்களின் தேசமாக விளங்கும் கனடாவில் இத்தேர்தல் சிறுபான்மைச் சமூகங்களிடையே மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. குடிவரவாளர்களின் வருகையையும் அவர்களுக்கு வழங்கப்படும் வசதிகளையும் கட்டுப்படுத்தக் கொன்சவேர்ட்டிவ் கட்சி கொடுக்குக் கட்டி நின்றது. ஆயினும் அவர்கள் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை.

லிபிரல் கட்சிப் பிரதமர் போல் மாட்டீன் கனடாவுக்கு வரிகட்டாமல் தப்பிக்க தனக்குச் சொந்தமான பல கப்பல்களை வேற்று நாட்டுக் கொடியின் கீழ் செயற்பட அனுமதித்தார் எனக் குற்றம்சாட்டப்பட்டார். இதுவே லிபரல் கட்சி பெரும்பான்மைப் பலத்தை இழந்ததற்குக் காரணம் எனத் தெரியவருகிறது. குடியேறிய புலம்பெயர் மக்கள் தங்களது ஆதரவை முழுமையாக வழங்கியதன் மூலம் லிபரல் கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைக்க வழிசமைத்துள்ளதாக தேர்தல் ஆய்வுகள் தெரிவிக்கின்றது.

பல்லின சமூகங்கள் மிக அதிகமாக வாழும் ஒன்ராரியோவில் லிபரல் கட்சி பெரும்பான்மையான ஆசனங்களைத் தக்க வைத்துக் கொண்டது. ஏனைய அனைத்து மாகாணங்களிலும், லிபரல் கட்சி பலத்த எதிர்ப்பை எதிர்நோக்கியது. குறிப்பாக, பிரிவினை கோரும் கியூபெக் மாகாணத்தில் லிபரல் கட்சி மண்கவ்வியது.

AA ExPRESS
24 Hours Service
எங்கும் எப்போதும் அழைக்கலாம்
உங்கள் தேவை எங்கள் சேவை
தமிழ் சாரதிகள் உள்ளார்கள்
020 89020123
எங்கள் கம்பனிக்கு முழு அல்லது பகுதிநேர வாகன சாரதிகள் தேவை. வாரம் £500 மேல் கிடைக்கும். PCO Licence needed.
If you don't have, we will help you to get.

B&B SAVE MONEY SAVE TIME
B & B TIMBER & BUILDING MERCHANTS
Free Local Delivery
Open: MON - SAT 8 am to 6 pm
WED only 8 am to 1 pm
Call 020 8574 6691
020 8571 3430
6,7,8 - North Parade, North Road, Southall

LISA TIMBER LTD.
Importers of Hardwood & Parquet Flooring
REAL WOOD FLOORING AT DISCOUNTED PRICE
Call
020 8961 9030
Unit 40, Cumberland Business Park, Cumberland Avenue, Park Royal NW10 7RX

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards

# அமெரிக்கத் தமிழர்களின் திருவிழா

அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையின் 17வது தமிழர் திருவிழா யூலை 3 - 4ல் மோர்கன் பல்கலைக்கழகத்தின் நுண்கலை நிலையத்தில் நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா சம்பந்தன் சிறப்பு விருந்தினராகத் கலந்துகொண்டுள்ளார். அங்கு ஜெகத் கஸ்பர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இசைஞானி இளையராஜாவின் சிறப்பு நிகழ்வு, நடிகர் விவேக், அபிராமி ஆகியோரது நட்சத்திரக்கலை நிகழ்ச்சி, பாடகர்களான சுஜாதா, ஸ்ரீநிவாஸ் ஆகியோர் பங்கு பற்றும் மெல்லிசை நிகழ்வு என்பனவும் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. கலைமாமணி புஸ்பவனம் குப்புசாமி, அனிதா குப்புசாமி ஆகியோரது நாட்டுப்புறப் பாடல்கள், முனைவர் சுந்தர ஆவுடையப்பன் குழுவினரின் பட்டி மன்றம் மற்றும் கவியரங்கம், கருத்தரங்கம், நடனம், நாடகம் உட்பட மேலும் பல கலை நிகழ்வுகள் இதில் இடம்பெற்றன.

# ABRA WHOLESALES LTD.

**Unit 9P, Kynoch Road, Eley Estate, Edmonton N18 3BH**

**POUND/DISCOUNT TRADE SPECIALIST**

**Ph: 020 8887 9303 Fax: 020 8887 9304**

sales@abrawholesales.co.uk

- * Toiletries
- * Household Goods
- * Stationery
- * Gifts & Toys
- * Silk Flowers
- * Mobile Phone Accessories
- * Medicines
- * Soft Drinks
- * Greeting Cards
- * Video, DVD & CDs
- * Electricals

**We have increased our range of products by 500 to over 6000 and our selling area to 21,000 sq. ft.**

Opening Times
**Mon - Fri**
9am - 7 pm
**Sat & Sun**
9.30am - 3.30pm
**Bank Holidays**
9.30am - 3.30pm




**Open 7 days a week**



## DIGITAL WINDOWS (U.K.) LTD

Maintainence Free REHALL PVCU WINDOWS

- * Fully Welded & Internally Beaded Doors
- * Aluminium Windows, Doors & Conservatories
- * Free Estimates
- * 10 years Insurance Back Gaurantee
- * We are a Member of Fensa

Call us on
**(T) 020 8459 2666/7403**

2B Church Hill Rd.
Willesden NW2 5EA



## LONDON CELLULAR 020 8459 6914

T··Mobile···



**FREE NOKIA 3510i**

FREE 750 Off Peak Minutes
FREE 50 Text Messages per Month
FREE Connection
All for only £7.50 per month (inc. VAT)

Colour display, polyphonic ringing tones, games, MMS receive, WAP, GPRS, fun covers.

All Offers subject to terms and conditions - ask in-store for details

**100 High Road, Willesden Green London NW10 2PP**



மிதுஸ் ஜுவல்லரி அண்டு டயமண்ட்ஸ் பேலஸில் உங்கள் பொன்னான கனவுகளுக்கு அழகான வடிவம் கொடுங்கள்

# Mithus Jewellery

OPEN 7 DAYS A WEEK

322-324 London Rd., Croydon CR0 2TJ
Ph: 020 8683 1756 Fax: 0208683 1792

## DIAMOND PALACE

Ph: 0208767 5333 Fax: 02087675814
76 Tooting High St., London SW17 0RN



## AIR SAVERS TRAVEL

**0208 540 2226** IATA

| | | | |
|---|---|---|---|
| Colombo | £320 | Madras | £400 |
| Toronto | £250 | Australia | £475 |
| Bombay | £315 | Singapore | £360 |
| Kuala Lum | £370 | New York | £135 |
| Trichy | £415 | Bangalore | £415 |

All Major Credit Cards Accepted



# BILLET FURNITURE LTD.

*Italian Furniture Specialist.* *Quality Furniture at Affordable Prices*

*Dining & Bedroom Furniture*

*Special Offer*

*Leather/Upholstered Suites*



Italian Dining Set + 6 Chairs **£499**
In Draylon Any Colour
Inc. delivery

Single Divans Bed **£45**
Double Beds **£85**

**TEL/FAX: 020 8531 1235**
Unit 4. Billet Works, Billet Road, Walthamstow, London E17 5DT


Community's best friend UDHAYAN


# H A R T E X

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

· COMBAT · PULLOVERS · MAP CASES · THERMAL UNDERWEAR · RAINWEAR · BODY WARMERS · SHORTS · COMPRESSORS BAGS · CLOTHING · BOOTS · COOKWARE · MONEY BELTS · HIKING BOOTS · HAMMOCKS · CUTLERY SETS · PLATES · WEBBING · GLOVES · HEADWEAR · HIKING BOOTS

Competitive Prices



55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS



## Ellis & Co. Residential Sale & Letting

வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
**Kumar on**
**(T) 020 8204 3300**
**(F) 020 8206 1102**
**(M) 07984 184064**
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow



## SAMS Accounting Services Ltd.

- * Audit & Accountancy
- * Prepare Monthly Management Accounts
- * Tax Planning & Refund
- * Specialist in Solicitor Accounting
- * SAGE Line 50/Payroll

Call Mrs. Sumathi Janakan on
**02085098484**
**07715576989**
email: info@samsaccounting.co.uk
92a Forest Road, Walthamstow, London E17 6JQ



## Ravi Solicitors

COMMISSIONERS FOR OATHS

- * Conveyancing
- * Work Permit
- * Immigration

Free initial Advice
For Prompt/Efficient Service
Call: S.Ravindran
(T) 020 8426 1178
(M) 07956 489 231
(F) 020 8429 3847
457B Alexandra Avenue, Rayners Lane, Harrow



## Rainbow

Multi Cuisine Restaurant & Bar
Indian, Tandoori & Srilankan

- Free Car Parking
- Fully Licensed
- 12 to 12 Bar
- Takeaway available
- Birthday parties
- Catering to all parties

You only leave to come back

96 A, High St., (Opp. to Police Station)
Southall, Middlesex, UB1 3DN Phone: 020 8574 4087
website: www.barrainbow.com



**தீராத உங்களின் மன வேதனைகள் தீர்ந்திட, உங்களின் வாழ்க்கையில் என்றும் வெற்றி கண்டிட தரிசியுங்கள் அன்னையை 020 8905 7775, 020 8952 7775**



# HAD AN ACCIDENT RECENTLY ?

**Should you have been involved in a motor accident which was not your fault, let JAK AUTOS manage your claim. We work on a NO WIN - NO FEE basis. All service costs are recovered from the guilty party's insurance company.**




**If you are unfortunate enough to be involved in an accident, call**

**J.A.K. AUTOS LTD.**
unit 2 Sheraton Business Centre,
Wadsworth Close, Perivale Greenford,
Middx. UB6 7JB
email: jakautos@btconnect.com
(T) 020 8991 5454, (M) 07956 869039
(F) 020 8810 5800